# திருக்கோயில்

மார்ச் 1991 விலை ரூ. 3






திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற
பேரறிஞர் அண்ணா நினைவுநாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொது
விருந்து விழாவில் ஆணையாளர் திரு வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்.
அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். ஆலய
உதவி ஆணையாளர் திரு ஜி.இராஜநாயகம்
பி.ஏ.பி.எல். உடன் உள்ளார்.

முகப்பு:

சென்னை, திருவல்லிக்கேணி
அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை : 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 பிரமோதூத ஆண்டு பங்குனி மார்ச் 1991 விலை ரூ. 3-00 | மணி : 3

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

## பொருளடக்கம்

வேதமும் ஆகமமும்
—திருமந்திரச்செம்மல் டி.வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.

வடிவேலன் அமர்ந்த வடசென்னிமலை

கடும்பாடி சின்ன மாரியம்மன்
—சி. சுரேஷ்குமார்

சித்திரபாரதம் —செவ்வேள்

ஆடல்காணீரோ திருவிளையாடல் காணீரோ
—வே. தியாகராஜன்.

அருபரத்தொருவன் அவனியில் வந்து குருபரன் ஆகி
—சக்திசுகன்.

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

நால்வர் காட்டிய வழி
—நாங்கூர் எஸ். ஈஸ்வரன் எம்.ஏ.,

சோழநாட்டுத் வைணவத் திருத்தலங்கள்
—நித்திலக்கோ.

திருக்கடவூர் ஸ்ரீ காலசம்ஹார மூர்த்தி
—தி. இராசமாணிக்கம்

பரந்தாமனும், பட்சிராஜனும்
—ஜெயஸ்ரீ மூகாம்பிகா.

கம்பரின் இராமாவதாரம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# வேதமும் ஆகமமும்

திருமந்திரச் செம்மல் டி.வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.,


அறமும் ஆன்மிகமும் நமது சமுதாயத்தின் சிறப்புமிக்க அடிப்படையாகும். தொன்று தொட்டு நம் நாட்டு மக்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துவதே ஒரு தலையாயகொள்கை என்று கருதவில்லை. இறை உணர்வு, கூட்டு வாழ்வு, சமுதாய நலன் போன்றவை வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாக விளங்கின.

இயற்கை எழில் நிரம்பிய பல இடங்களில் அமர்ந்துகொண்டு யோகிகளும், ஞானிகளும் தங்களது மனம், புத்தி, சித்தம் ஆகியவற்றை ஒருமுகப்படுத்திக் காணும் பொருள்களுக்கு அப்பாற்பட்ட, அவற்றிற்கு மூலகாரணமாக இருக்கின்றஒரு பரம்பொருளின்தன்மையைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினார்கள். அவர்கள் இறைவன் அருள் பெற்றவர்கள். தீர்க்கதரிசிகளாக இருந்தார்கள். அவர்களுக்கு இறைவன் அருளிச் செய்தது வேதங்களாகும். எனவே வேதங்களை இறைவனின் மொழியாக நம் முன்னோர்கள் பேசினார்கள். ''வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்துஅகன்றநுண்ணியனே'' என்று மாணிக்கவாசகப் பெருமான் பாடினார். வேதகாலத்து முனிவர்கள் எல்லாவற்றிற்கு மேலான பரம்பொருளை ஆர்வத்துடன் நாடினார்கள். சீரிய முறையில் இறைவனைப்பற்றி சிந்தித்தவர்களாக, தங்கள் உள்ளத்தை அவர்கள் ஆழ்ந்து ஆராய முற்பட்டார்கள். அதன் விளைவாக இறை உணர்வு முழுதும் பெற்ற அருள் பெரியார்களுடைய உள்ளங்களில் வேதங்கள், கனிந்த அனுபவமாக எழுந்தன. அவர்கள் உள்ளங்களிலே எழுந்த வேதங்களின் ஒலிஇறைவனைப் பற்றிய உண்மைகளைத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தது.

அந்த உண்மைகளை உணர்ந்துகொண்ட வேத முனிவர்கள் பேரறிவைத் தம்முள் அனுபவித்து, பேரின்பம் பெற்று, அந்த இன்பத்தை உலக மக்களுக்கு பகிர்ந்துகொடுக்க வேண்டி, வழிவழியாக, வாய்மொழியாக தங்களுடைய சீடர்களுக்கு அருளிச் செய்தனர்.

வேதம் முதலில் ஒன்றாகவே இருந்தது. எண்ணிலடங்காத மந்திரங்களைக் கொண்டிருந்தது. பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு வியாச முனிவர் வேதத்தை ருக்வேதம், யசுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்று நான்காகப் பிரித்தார். இவ்வாறு வேதத்தை பிரித்தமை காரணமாகவே அவருக்கு வேத வியாசர் என்ற பெயர் ஏற்பட்டது.

ருக்வேதம் செய்யுள் வடிவில் உள்ளது. யசுர் வேதம் பெரும்பாலும் உரைநடையிலும், சில பகுதிகளில் செய்யுள்களாகவும் உள்ளது. சாமவேதம் இசையுடன் பாடும் நிலையில் உள்ளது. சாம வேதத்தில் பெரும்பாலும் ருக்வேத செய்யுள்கள் காணப்படுகின்றன. அதர்வண வேதத்தில் பல மந்திரங்கள் உள்ளன. ருக், யசுர், சாம வேதங்கள் வேள்விகளில் உபயோகமாகின்றன. அதர்வண வேதம் உபாசனைக்குப் பயன்படுகிறது. நன்மை பயக்கவும், இடர்களை



திருமந்திரச்செம்மல்
டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.,

நீக்கவும், பகைவரை அழிக்கவும், பொதுநலம் புரியவும் வேண்டி மந்திரங்கள் அதர்வண வேதத்தில் காணப்படுகின்றன.

வேதங்கள் சாகைகள் எனப்படும் உட்பிரிவுகளுடன் அமைந்துள்ளன. மீண்டும் இந்தச் சாகைகளில், சம்ஹிதை, பிராமணம், ஆரண்யகம் என்ற மூன்று பகுதிகள் இருக்கின்றன. இந்த மூன்று பகுதிகளையும் முறையே கர்ம காண்டம், உபாசனா காண்டம், ஞான காண்டம் என்று பாகுபடுத்தியும் கூறுவதுண்டு.

வேதங்கள் மிகப் பழமையானவை. பல ஆயிரம் ஆண்டுக் காலமாக முனிவர்கள் வேதங்களை அருளிச் செய்துள்ளார்கள். அவை இறைவனைப் பல நிலைகளில் துதிக்கின்றன. போற்

றுகின்றன. இம்மையிலும், மறுமையிலும் மனிதர்கள் நல்ல பயனை அடைய வேண்டி செய்யும் வேள்விகள் விளக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கான மந்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. செய்யப்பட வேண்டிய செயல்களையும், தவிர்க்கப்பட வேண்டிய செயல்களையும் வேதங்களின் கர்ம காண்டம் தெளிவுபடுத்துகின்றது. இறைவனை உபாசனை செய்யும் வழிகள் உபாசனகாண்டத்தில் வருகின்றன. நற்கருமங்களை சுயநலமின்றிச் செய்து மனத்தூய்மையை முதலில் பெற வேண்டும். பின்னர் தியான முறைகளைக் கையாண்டு ஒருமைப்பட்ட மனநிலையை அடையும்பொழுது, இறைவனைப் பற்றிய அனுபவத்தை, மெய்யுணர்வை பெறலாம். மெய்ப்பொருள் எத்தகையது என்பதை ஞானகாண்டம் விளக்குகின்றது. ஞான காண்டம் இயற்கை எழில் மிகுந்த காடுகளில் தோன்றியது என்று எடுத்துக் கொள்ளலாம். அறிவில் முதிர்ந்தவர்கள், இறைச்சிந்தனையில் தமது மனதை முழுமையாகச் செலுத்தி, காடுகளுக்குச் சென்று, எல்லாப் பற்றுகளையும் களைந்து, தீவிர சிந்தனையில் ஈடுபட்டு, மெய்ப்பொருளின் தன்மையை தம்முள் உணர்ந்து உலகிற்கு அளித்ததே உபநிடதங்கள் என்பர். இவையே ஞானகாண்டப் பகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அறியாமையை நீக்கிக் கொண்டு ஒவ்வொருவரும் தனக்குள் இறைத் தன்மையை உணர்ந்து கொள்ளுவதே உபநிடதங்களுடைய கல்வியுமாகும். உபநிடதங்கள் வேதங்களின் தத்துவ ஞான அனுபவப் பகுதிகளாக திகழ்கின்றன. எனவே, உபநிடதங்கள் வேதத்தின் முடிவாக, வேதாந்தமாக எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆகவே, உபநிடதங்கள் வேதத்தின் பகுதியாகும். வேதங்கள் வேறு, உபநிடதங்கள் வேறு என்பதல்ல.

பண்டைத் தமிழ்நாட்டிலும் வேதம் ஒலித்ததாக சங்க நூல்கள் சொல்லுகின்றன. சேர நாட்டிலும் சோழ நாட்டிலும் மக்கள் காலை வேளையில் முதல் கோழிகூவும்போதே எழுந்துவிடுவார்கள் என்று கூறப்பட்டபொழுது, பாண்டிய நாட்டு புலவர் ஒருவர் மதுரை மாநகரில் பொழுது விடிவதற்கு நெடுநேரத்திற்கு முன் பிருந்தே வேதியர்கள் வேதம் ஓத மக்கள் எழுந்துவிடுவார்கள் என்று பாடினார்.

''பூவினுள் பிறந்தோன் நாவினில் பிறந்த
நான்மறைக்கல்வி கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏமஇன் துயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாதுஎம் பேரூர் துயிலே''

இது பரிபாடலில் வருகின்றது.

வேதங்களை இறைவனுடைய திருவாக்காக பெரியோர்கள் கூறுவர். ''இறைவனூல்'' என்று திருமூலர் குறிப்பிடுகிறார். வேதங்கள் காட்டும் இறை ஒன்றேயாகும். வேதங்களில் பல தெய்வங்களுடைய பெயர்கள் காணப்பட்டாலும் வேதங்களின் முடிவான முடிவு இறைவன் ஒருவனே என்பதாகும். ஓங்கி, பரந்து, ஆழ்ந்து நிற்கும் பரம்பொருளுடைய முழு விளக்கமாக வேதங்கள் அமைந்துள்ளன. ஆகவே,

### உடல் எங்கே விழுமோ யாரறிவார்?

**காடோ செடியோ கடல்புறமோ கனமிகுந்த**
**நாடோ நகரோ நகர்நடுவோ நலமிகுந்த**
**வீடோ புறந்திண்ணையோ தமியேன்உடல் விழுமிடம்**
**நீள்தோய் கழுக்குன்றில் ஈசா என்னுயிர்த்துணை நின்பதமே.**

—பட்டினத்தடிகள்

வேதங்கள் ஒரு பொதுமறையாகும். இறைவனுடைய நெறியை அடைவதுதான் மக்களாய் பிறந்தவர்களுடைய இலட்சியமாகும் என்பதை வேதங்கள் உணர்த்துகின்றன. அறிவின் கூர்மையோடு ஆராய்ச்சி செய்து, வேதங்களின் உண்மையைக் கண்டுபிடிப்பதுகடினமான ஒன்று என்று பெரியோர்கள் கூறுகின்றனர். அந்த உண்மைகள் அனுபவங்களால் அடையப்பட வேண்டியவை. அப்படி அடைவதற்கான அறங்களை வேதங்கள் எடுத்துக் கூறுகின்றன. அந்த அறங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டியது நமது கடமையாகும் என்று திருமூலர் உணர்த்துகின்றார். வேதத்தில் கூறப்பட்டுள்ள அறத்தைத் தவிர வேறொன்றும் இல்லை என்றும் திருமூலர்பிரான் அறிவிக்கின்றார். வேதங்களில் நம்முடைய வாழ்க்கைக்குத் தேவையான எல்லாஅறங்களும் உண்டென்றும் அவர் கூறுகின்றார். நம்முடைய அறிவுத் திறத்தினால் தர்க்கவாதம் செய்து, வாதிட்டு உண்மையை நிலைநாட்டுவதாகச் சொல்லிக்கொண்டு நேரத்தை வீணடிப்பதைவிட தர்க்கவாதங்களைத் தவிர்த்து, வேதங்களில் கூறப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவே அவற்றின் உட்பொருளை உணர்ந்து மக்கள் தலையாய இன்பம் பெறக்கூடும் என்றும் திருமூலர்பிரான் சொல்லுகின்றார்.

''வேதத்தைவிட்ட அறம் இல்லை;வேதத்தின்
ஓதத்தகும் அறம் எல்லாம் உள; தர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற்றார்களே''.

(திருமந்திரம்....51)

வேதங்களில் நம்முடைய வாழ்க்கைக்குத் தேவையான எல்லா அறங்களும் உண்டென்று திருமூலர் கூறுவதைச் சிலர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மனிதன் பகுத்தறிவு உடையவன். அந்த அறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்து கிடைக்கும் உண்மையின் அடிப்படையிலேதான் வாழ்க்கை வளர இயலும் என்ற கொள்கையுடையவர்கள் பலர் உண்டு. விஞ்ஞானரீதியாக நமக்குக் கிடைக்கும் அறிவு மிகவும் முக்கியமானதுதான். அதை பயன்படுத்

திக்கொண்டு வாழ்க்கையில் பல வகைகளில் முன்னேறி இருக்கின்றோம். ஆனாலும் பகுத்தறிவு என்பது எல்லா நிலைகளுக்குள் செல்லாது. அதற்கென்று ஒரு எல்லை உண்டு. அந்த எல்லைக்கு அப்பாற்பட்ட ஒரு நிலத்தில் விளையும் பயிரும் ஒன்றுண்டு.

''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும்
மிக்குச்சோதிக்க வேண்டா''

என்றார் ஞானசம்பந்தப்பெருமான்.

திருமூலநாயனாரும்

''காட்டுங் குறியுங் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்''

என்று குறிப்பிடுகின்றார்.

வேத நூல்களில் காணப்படும் உண்மையை அறிந்துகொள்ள அனுபவநிலை தேவைப்படுகிறது. அதற்கான சாதகங்களைச் செய்யவேண்டும். அந்த அனுபவநிலையில் இருந்துகொண்டு தான் அக்காலத்து இறையுணர்வாளர்கள் இறைவனுடைய தன்மையை விளக்கினார்கள். வேதங்கள் அறிவு படைத்த மனிதன் தன்னுடைய அறிவினால் மட்டும் தெரிந்துகொள்ள முடியாத ஒன்றை எடுத்துக் காட்டுகின்றது. வேதங்களில் தோத்திரப் பகுதிகளும், வேள்விகளை நடத்துவதற்கான வழிகள் மட்டுமே காணப்படுகின்றன என்று கூறுவாரும் உண்டு. அவ்வாறு கூறுபவர்கள் வேதங்களை முற்றுணர்ந்தவர்களாக மாட்டார்கள். வேள்விகளுக்கு அப்பாலுள்ள பரம்பொருளை வேதங்கள், உபநிடதங்கள் மூலமாக நமக்கு விளக்குகின்றன என்பதைப் பெரியோர்கள் நமக்கு எடுத்துக்காட்டி உள்ளார்கள். இந்த விளக்கத்தைப் பெற்று, அறத்தைக் கடைப்பிடித்து இறை அனுபவத்தைப் பெறவேண்டும்.

எனவே, வேதங்களை வெறுமனே பாடம் படிப்பது போல ஓதிவிட்டால் மட்டும் போதாது என்று திருமூலர் சொல்லுகின்றார். வேதங்கள் நல்ல நெறியைக் காட்டுகின்றன. அவை சுட்டிக்காட்டும் பாதையில் செல்லாவிட்டால் அவற்றைப் படித்தும் பயன் இல்லை. வேதங்களை உரைக்கின்றவர்கள் எல்லோரும் வேதியர்கள் ஆவதில்லை. வேதம் இறைவனுடைய மொழி ஆகும். இறைவன் அதை எப்பொழுதுமே நமது உள்ளங்களில் விளக்கிக் கொண்டிருக்கின்றான். பிரம்மன் வேதங்களை உச்சரித்துக் கொண்டே இருக்கின்றான். மற்ற தேவர்களும் விடாமல் வேதங்களை எடுத்துரைத்துக் கொண்டிருக்கின்றனர். இருந்தபோதிலும் அவர்கள் இறப்பிற்கும் பிறப்பிற்கும் அப்பாற்பட்ட நிலையான பதவியைப் பெறுவதில்லை. பிரம்மனுக்கும் பிறவி உண்டு. வேதங்களை நன்குணர்ந்து அவற்றால் சொல்லப்பெற்ற வேள்விகளையெல்லாம் சிறப்பாகச் செய்து வாழ்ந்தவர்களும், வேதங்கள் காட்டும் மெய்ப்பொருளை உணராவிட்டால் அவற்றைப் படித்ததன் பயனை அடையமாட்டார்கள். எனவே, வேதங்களைக் கற்று, உணர்ந்து, மெய்ப்பொருளைத் தெரிந்துகொண்டு வேதத்தை ஓதுபவர்கள் உண்மையான வேதியர்கள் ஆகிறார்கள். வேதங்களின் முழுப் பயனை அடையவேண்டுமென்றால் அவை காட்டும் மெய்ப்பொருளை நாடவேண்டும். இதுவே பிறவிப் பயனுமாகும். வேள்விகளுக்கு அப்பாற்பட்ட ஒரு பரம்பொருளை அறிந்து கொள்வதற்கான சாதனம் வேதம் என்று உணர்ந்து அதன் வழி நடப்பவரே வேதியர் என்ற புரட்சிகரமான கருத்தை திருமூலர் வெளியிடுகின்றார்.

''வேதம் உரைத்தாலும் வேதிய னாகிலன்;
வேதம் உரைத்தானும் வேதா விளங்கிடா;
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்கா;
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள்
காட்டவே''

(திருமந்திரம்.... 52)

மெய்ப்பொருளை அறிவிப்பதே வேதங்களின் நோக்கமாகும். அதுவே வேதங்களின் நெறியாகும். வேதங்களின் சிகரமாகிய ஞான காண்டம் இந்த நெறியை நமக்குத் தெளிவாகத் தருகின்றது. ஞானகாண்டத்தின் அங்கமாகிய உபநிடதங்கள் எல்லா நெறிகளும் ஒன்று சேர்ந்து பெருவழியாக அமைந்து, திருநெறியாக விளங்குவதே வேதாந்தமாகும் என்று எடுத்துக்காட்டுகிறது. தூய்மை, வாய்மை, ஞானம் இவற்றால் கிடைக்கக்கூடிய பேரின்பத்தை உபநிடதங்கள் உணர்த்துகினறன. இறைவன் ஒருவனே. அவன் விண்ணாய் பரந்து நிற்கின்றான். உயிருக்குயிராய் உள்ளந்தோறும் இடங்கொண்டுள்ளான். அவனே பேரறிவும் பேராற்றலுமாகும். அவனே உண்மை. அவனை நாம் பற்றுவதற்கு வழி கொடுக்காமல் புறத்தோற்றங்கள் நமது மனத்தை மறைக்கின்றன. மனதிலுள்ள மலங்களை நீக்கி, உலகத்தை நினையாமல், அனைத்தும் கடந்து நிற்கும் பரம்பொருள் ஒன்றை ஞானாசிரியன் வழியாக உணர்ந்து பெறுதலே திருநெறியாகும். அந்த நெறியை வேதாந்தம் விளக்குகின்றது என்கிறது திருமந்திரம்.

''திருநெறியாவது சித்தசித் தன்றிப்
பெருநெறியாய பிரானை நினைந்து
குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே''

(திருமந்திரம்......54)

வேதாந்தம் காட்டும் திருநெறியை சிவமாம் நெறி என்று திருமூலர் குறிப்பிடுகின்றார், வேதத்தைச் செய்தவன் சிவபெருமானே என்பது அவருடைய உணர்வாகும். இதை குருநெறி என்று அழைக்கின்றார். ஆகவே, வேதங்களின் முடிவு சிவமாகிய பரம்பொருளை சுட்டிக்காட்டுகிறது என்று உணர்த்தி அதுவே சித்தாந்தங்களின் முடிவு என்றும் பின்னர் விளக்கி, சித்தாந்தங்களின் முழுமுதற் தன்மையை திருமூலர் விளக்கிச் சொல்லியுள்ளார் என்பதை நாம் தெளிகிறோம்.

**(இதன் தொடர்ச்சியை அடுத்த இதழில் படித்து மகிழலாம்.)**

# வடிவேலன் அமர்ந்த வடசென்னிமலை



**( ஆலய வெளியீடு )**

| | | |
|---|---|---|
| திருத்தலம் | ... | வடசென்னிமலை |
| தெய்வம் (மூலவர்) | ... | அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி |
| கோலம் | ... | வேல் மயிலுடன் தனியே நின்ற திருக்கோலம் |
| பழைமை | ... | சுமார் 100 ஆண்டுகளுக்கும் முந்தையது |
| கோயில் கொண்டுள்ள பிற தெய்வங்கள் | ... | 1. குன்றின் அடிவாரத்தில் அருள்மிகு வினைதீர்க்கும் விநாயகர்<br>2. மலையின்மேல் செல்லும் வழியில் இடும்பன் கோயில்<br>3. குன்றத்தின் உச்சியில் அருள்மிகு தண்டாயுதபாணி கோயில் |
| திருக்கோயில் நிர்வாகம் | • | இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, தமிழ்நாடு அரசு. |

ஆண்டு வருமானம், சுமார் ரூ. 2,00,000

வடசென்னிமலையின் இட அமைப்பு:

வளம் செறிந்த வடசென்னிமலை, குன்று தோறாடும் குமரன் உகந்த திருமலையில் ஒன்றாகும். இது சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில், ஆத்தூரின் கிழக்கே 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

இவ் வடசென்னிமலை, கல்ராயன் மலைத் தொடரின் தெற்கே தனியாக உள்ள ஒருசிறு குன்றாகும். இக்குன்றின் உச்சியில் தன்னிகரில்லா தமிழ்த் தெய்வமாம் முருகன் புன்னகை தவழும் குழந்தை வடிவில் பால முருகனாக நின்ற திருக்கோலத்தில் காட்சியளித்து அருள் வழங்குகின்றார்.

அடர்ந்த மரங்கள் நிறைந்த இம்மலையின் பரப்பளவு 173 ஏக்கர் 74 சென்டுகளாகும்.

ஆத்தூரின் வழியே ஓடி வரும் 'வெள்ளாறு எனப்படும் வசிட்டநதி, இவ் வடசென்னிமலையின் வடக்கே உள்ளது.

வடசென்னிமலைக் குன்று தெற்கே சதாசிவபுரம், வடக்கே காட்டுக்கோட்டை, மேற்கே வளையமாதேவி, கிழக்கே சார்வாய் ஆகிய சிற்றூர்களால் சூழப்பட்டுள்ளது. இவ் வட சென்னிமலை சதாசிவபுரம் ஊராட்சியைச் சார்ந்ததாகும்.

திருவிழாக்காலங்களில், வடசென்னிமலையைச் சுற்றியுள்ள சிற்றூர்களிலிருந்தும் ஆத்தூர், ஆறகளூர், தலைவாசல், கள்ளக்குறிச்சி, விருத்தாசலம், அரியலூர், பெரம்பலூர், சேலம், இராசிபுரம், முதலிய இடங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் இவ் வட சென்னி மலைக்கு வந்து, குன்றமர்ந்தகுமரனை வழிபட்டு, அவன் அருள் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

இம்மலையின் மேல் செல்வதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று படிவழி; மொத்தப் படிகள் 428; மற்றொன்று மலை மேல் வாகனங்களில் செல்வதற்கான மலைப்பாதை (Ghut Road) இதன் தொலைவு 1 கிலோ மீட்டர் ஆகும்.

போக்குவரத்து:

வடசென்னிமலையினை வந்தடைவதற்கு புகைவண்டி வசதியும், பேருந்து வசதிகளும் நிறைய உண்டு.

புகைவண்டி வசதிகள்:

'சேலம்-விருத்தாசலம்' புகைவண்டித் தடத்தில், சேலம் நகரத்திலிருந்து 57-வது கிலோ மீட்டரில் உள்ள காட்டுக் கோட்டை புகைவண்டி நிலையத்தில் இறங்க வேண்டும். வடசென்னிமலையின் அடிவாரத்திலேயே காட்டுக்கோட்டை புகைவண்டி நிலையம் உள்ளது.

திருவிழாக்கள்:

| | | |
|---|---|---|
| சித்திரை | ... | வருடப்பிறப்பு |
| வைகாசி | ... | விசாகம் (இலட்சார்ச்சனை) |
| ஆடி | ... | 1. அமாவாசை<br>2. பதினெட்டு<br>3. படி விழா |



| | | |
|---|---|---|
| ஐப்பசி | ... | கந்தர் சஷ்டி |
| கார்த்திகை | ... | தீபம் |
| தை | | 1. பூசம் |
| | | 2. அமாவாசை |
| பங்குனி | ... | உத்திரம் |

இவை தவிர, ஒவ்வொரு தமிழ் மாதமும் வருகின்ற கிருத்திகை மற்றும் சஷ்டி விரத நாட்கள் பங்குனி உத்திரவிழாவின் போது பக்தர்கள் சேவல், மற்றும் தத்தம் வயல்களில் விளைந்த காய்கறிகளைக் காணிக்கை செலுத்துவது கண்கொள்ளாக் காட்சி.

அருகிலுள்ள நகரங்களும்
அதன் தொலைவும்:

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆத்தூரிலிருந்து வடசென்னிமலை | 8 | கி.மீ. |
| 2. | கள்ளக்குறிச்சியிலிருந்து ,, | 38 | கி.மீ. |
| 3. | சேலத்திலிருந்து ,, | 57 | கி.மீ. |
| 4. | விருத்தாசலத்திலிருந்து ,, | 76 | கி.மீ. |

பேருந்து வசதிகள் :

இம்மலையினை அடைய ஆத்தூரிலிருந்து கள்ளக்குறிச்சி செல்லும் நெடுஞ்சாலையில் ஆத்தூரின் கிழக்கே உள்ள காட்டுக்கோட்டை நிறுத்தத்தில் இறங்கி 1 கிலோ மீட்டர் தெற்கே செல்லவேண்டும்.

மேலும் 1. ஆத்தூரிலிருந்து-புளியங்குறிச்சி
2. ஆத்தூரிலிருந்து-நெற்குணம்
3. ஆத்தூரிலிருந்து-வீரகனூர் (காட்டுக்கோட்டை வழி)

வழித் தடங்களில் செல்லும் பேருந்துகள் வடசென்னிமலைக் கோயில் வழியாகவே செல்லுகின்றன.

ஆத்தூரிலிருந்து வாடகைக்கார், குதிரை வண்டி வசதிகளும் உண்டு.

பிறசெய்திகள்:

வடசென்னிமலையில் குடி கொண்டுள்ள குமரனுக்கு முறையான முதல் 'குடமுழுக்கு விழா (கும்பாபிசேகம்) 6-2-1947 ஆம் ஆண்டு சிறப்பாக நடைபெற்றது.

இத்தகு சிறப்புமிகுந்த, இத்திருத்தலத்திற்கு அனைவரும் வருகைதந்து, வேண்டுவோர்க்கு வேண்டுவன வழங்கும் வேலவனை வழிபட்டு, அவன் அருள் பெற்று உய்ய வேண்டுகின்றேன்.

வடசென்னிமலை திருக்கோயிலின்வளர்ச்சிக்கான திருப்பணிகள் ஏராளமாக நடைபெற உள்ளன. எனவே, நல் உள்ளம் கொண்டோர், செல்வம் மிகுந்தோர் பொருளுதவி செய்து திருமுருகன் திருவருள் பெற்று உய்ய வேண்டுகின்றேன்!

''நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்!''




**சி. சுரேஷ்குமார்**

தமிழகத்தில் சிறப்பு வாய்ந்த மாரியம்மன் ஆலயங்கள் மிகப்பல. அவற்றுள்ளே ஏழு ஆலயங்கள் தனிச் சிறப்புக் கருதி ஒருசேர வைத்து எண்ணப் பெறுகின்றன. சமயபுரம், கண்ணபுரம், கோடியனூர், வீராம் பட்டணம், ஊத்துக்காடு, கடும்பாடி ஆகிய ஏழுர் மாரியம்மனுக்கும் இளையவள் இந்தக் கடும்பாடி மாரி சின்னம்மன்.

பெயரளவில் இவள் சின்னம்மன். ஆனால் அருள் சக்தியிலோ, சாந்நியத்திலோ மிகப் பெரிய மகா மாரியம்மன்.

கடும்பாடி அம்மனுக்கு ஆண்டுதோறும் ஐந்து பெருவிழாக்கள் அமோகமாக நடைபெறுகின்றன.

ஆடிப்பூரம், புரட்டாசி நவராத்திரி, மார்கழித் திருவாதிரை, மாசித்தெப்பம், பங்குனி உத்திரம் ஆகிய உற்சவ நாட்களில் கடும்பாடி கிராமம் மகமாயி பக்தர்களால் நிரம்பி வழியும். எண்ணற்ற குடும்பங்களுக்குக் குலதெய்வம் அவள்.

நெடுங்காலமாகச் செடிலாட்டம் என்ற பிரார்த்தனை வழிபாடு இங்கே பிரபலமாய் இருந்தது.

மாரியம்மனுக்கு நேர்த்திக் கடனாக, தம் முதுகில் கொக்கியைச் செலுத்தி, அந்தக் கொக்கியை அதற்கென உள்ள நெடுங்கம்பத்தில் மாட்டி, பிரார்த்தனையாளர் தொங்கியபடி ஆடுவது செடிலாட்டம். இதைச் செடிலூசல் என்றும் கூறுவர்.

வெள்ளையரது ஆட்சியின் முற்பகுதியில் இவ்வாறு செடிலாடிப் பிரார்த்தனை செலுத்துவது நிறுத்தப்பட்டதாம்.

ஆனால் பக்தர்கள் செடிலாடும் அந்த மரக் கம்பம் இன்றளவும் அம்மன் கோயில் வாசலில் வெயிலையும் மழையும் தாங்கிக் கொண்டு கிடக்கிறது.

திருக்கோயிலுக்குத் தெற்காக உள்ள இந்திர தீர்த்தம், கோயில் முன் வாசலில் நிகழும் செடிலாட்டம், நாள் கிழமைகளில் பொங்கலிடல், பூச்சொரியல் மற்றும் கரகாட்டம், தீமிதியல் இவை எல்லாம் தென்நாடெங்கும் புகழ் பெற்றவை.

கடும்பாடி மாரி சின்னம்மன் ஆதியில் புற்றுருவில் தோன்றிய சுயம்பு. ஊரெல்லாம் கூடிக் கொண்டாடும் உற்சவ மூர்த்தியும் மிகப் பழமையான வார்ப்பு.

கை கொடுக்கும் மாரி என்றும், கைவிடாத மாரி என்றும், கண்கண்ட மாரி என்றும், கண் அளிக்கும் மாரி என்றும் கீர்த்தி பெற்றவள் கடும்பாடி மாரி.

இவளது நாம ரூபத்தோடு நாடெங்கும் பற்பல அம்மன் கோயில்கள் எழுந்துள்ளன. அவள் ஒருத்தியே அங்கும், இங்கும், எங்கெங்கும் அமர்ந்து ஆட்கொள்கிறாள். அருளாட்சி செய்கிறாள்.

அவளை நாடி வந்து வழிபட்டு, பிரசாதமாக வேப்பிலைக் கொத்தும், மஞ்சள் காப்பும், வெண்ணீறும், பன்னீரும் பெற்றுச் செல்பவர் கலியெல்லாம் தீர்வர்; நலமெல்லாம் எய்துவர் என்கின்றனர் கடும்பாடி மக்கள்,

கடும்பாடி (கடம்பாடி) கிராமம் திருக்கழுக்குன்றம்-மாமல்லபுரம் சாலையில் ஆறாவது கல்லில் அமைந்திருக்கிறது; அம்மன் அடியார்களையெல்லாம் வரவேற்று வாழ்வளிக்கக் காத்திருக்கின்றாள். வணங்கிடுவீர் அன்னையின் திருவடிகளை; உயர்ந்திடுவீர் வாழ்வில் என்றென்றும்.


சித்திரபாரதம்
கதை வடிவம் செவ்வேள்
படம் - M.N ராஜா
சிங்கவுருவங்கள் தாங்கிநிற்கும் யானையின் தந்தப் பலகைமுன் அமர்ந்து சகுனியும் தருமரும் சூதாடுகிறார்கள் தருமர் முத்துமாலையை முதலில் பந்தயம் வைக்க துரியோதனன் சகுனிக்காக இரத்தினமாலையைப் பந்தயம் வைக்கிறான்
என்ன எண் வேண்டுமோ, கேள் தருமா ?
பன்னிரண்டு வேண்டும்
காணட்டும் உன் கண்ணிரண்டு காயகள் காட்டிவிடும் பன்னிரண்டு
சகுனி பாச்சிகையைக் கச்சிதமாக உருட்ட பன்னிரண்டே விழுகிறது.
முதல் தோல்வி முற்றிலும் தோல்வி ஆகாது தருமா! மேலும் பந்தயம் வைத்தாடு
யானைகள், குதிரைகள், தேர்கள், ஊர்கள், பணியாட்கள் என ஒவ்வொன்றாகப் பந்தயம் வைத்து அனைத்தையும் தோற்கிறார் தருமர்
விட்டதை ஜெயிக்க வேண்டாமா தருமா! உன் இராச்சியத்தை வைத்தாடு. வென்றால் இழந்த எல்லாமும் திரும்பப் பெறலாம்.
அடடா! இராச்சியத்தையும் இழந்து விட்டாயே தருமா! உன் தம்பிகளைப் பந்தயம் வை இதில் வென்றால் உன் இராச்சியம் திரும்பவும் உனக்கே
இராச்சியத்தை மீட்டும் ஆசையில் தம்பிகளை வைத்து சூதாடும் தருமர் தம்பிகளை இழப்பதோடு, தன்னையும் பந்தயம் வைத்து சூதாடித் தோற்றுப் போகிறார்.
என்ன தருமா! இப்படியாகிவிட்டது தோல்விகள் வெற்றிக்கான படிகளே. திரௌபதியைப் பந்தயம் வை உன்னையும் உன் தம்பிகளையும் மீட்கலாம்


சகுனியின் சூழ்ச்சி கண்டு கொதிக்கும் விதுரர் திருதராட்டிரனிடம் முறையிடுகிறார்.
அண்ணா! இங்கு நடைபெறும் அக்கிரமங்கள் கண்டாயா நீ.!
காணா உனக்குக் கண்கள் தான் இல்லை! காதுகளுமா கேட்கவில்லை? எல்லை மீறிப் போகும் இந்தச் சூதை இப்போதேனும் நீ தடுத்து நிறுத்து
"திருதராட்டிரா! துரியோதனுக்கு அறிவுரை கூறு சூது ஆடியவரை போதும்" வீடுமரும் நீதி போதிக்கிறார்.
திருதராட்டிரன் ஏதும் கூறாமல் மௌனம் சாதிக்கவே, தம்பிகளை மீட்கும் ஆசையில் தருமர் திரௌபதியை பந்தயம் வைத்துத் தோற்றுப் போகிறார்.
வெற்றி! வெற்றி! பொதுமகள் திரௌபதை அன்று யாகசாலையில் அமர்ந்த குற்றமே இன்று இப்படி பாண்டவர்க்குத் துன்பமாய் முடிந்தது'
மாயச் சூதில் வென்றது கொண்டு மதிமயங்கி உளறாதே துரியோதனா! அன்று விஷ்ணு சம்ஹாரம் செய்த காலநேமி முதலான அரக்கர்களே பூமியில் இப்போது அரசர்களாகப் பிறந்துள்ளார்கள்.
"அவர்களை அழித்து பூபாரம் தீர்க்க திருமாலும் ஒரு மன்னனாக வந்து அவதாரம் புரிந்துள்ளார் ஆதலால் அதருமம் செய்து அழிந்து போகாதே"
"யாகத் தீயில் அரக்கர்களின் அழிவுக்குக் காரணமாகத் தோன்றியுள்ள மகாபதிவிரதை திரௌபதியை நீ பழிதூற்றிப் பேசாதே"
விதுரர் நீதி கூறவும் கேளாது கைகொட்டிச் சிரிக்கிறான் துரியோதனன்
பிரதிகாமி! நீ போய் திரௌபதியை இங்கு அழைத்து வா

# ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ..!

கம்பன் கவிநயமணி
வே. தியாகராஜன்

(6)

நடனம் முடிந்தபின் அனைவரும் உண வருந்துகின்றனர். இறைவன் அள்ள அள்ளக் குறையாத அமுதம் போன்றவன். ''அடிசார்ந் தவர்க்கு முடியா இன்பம் நிறையக் கொடுப்பி னும் குறையாச் செல்வன்'' என்பர் பட்டினத் தார். இறைவனுடைய திருமணத்தில் அனை வரும் உணவருந்திய பின்னும் உணவுப் பொருள்கள் குறையாதிருந்தன. இதையறிந்த மீனாட்சியார் இறைவனிடம் சென்று ''பிரபு முப்பத்து முக்கோடி தேவர்களுடன் தாங்கள் இங்கு எழுந்தருளுகிறீர்கள் என்று எண்ணி உணவு நிறையத் தயார் செய்யப்பட்டது. மிக வும் அதிகமாக மிஞ்சிவிட்டன'' எனக்கூற ''நீ பெரிய செல்வந்தர் வீட்டுப்பெண் என்பதை நாமறிய வேணுமென்பதால் இவ்வளவு அதிக மாக உணவு தயாரித்தனைபோலும். உண்டு களைத்து உறங்குபவரைத் தவிர இங்கு பசி யால் களைப்படைந்திருப்பவர் ஒருவரையும் காணவில்லேயே'' எனக் கூறிய இறைவன், தன் பக்கத்தில் நின்றிருந்த குண்டோதரனின் வயிற் றில் வடவாமுகாக்கினியை வருமாறு நினைத் தார். வயிற்றில் அக்னிவர குண்டோதரன் திடீ ரென்று 'பசி பசி' எனக் கதறிச் சோர்ந்து கதற இறைவன், ''தேவி! குடையெடுக்கும் இவனுக்கு சிறிது சோறிடு. இன்னும் இருந்தால் பின் னால் பார்க்கலாம்.'' என்று கூற குண்டோதர னைச் சமையலறைப் பக்கம் அழைத்துச் சென் றாள் அம்மை.

''குடை எடுக்கும் இக்குறியதாள் குறட்கு ஒரு
பிடிசோறு
இடுமின் அப்புறம் சோறுமாலெனை; தொழுது
எல்லாம்
உடைய நாயகி போயினாள்; குறியனும் உடனே
நடைதளர்ந்து கண்புதைத்து வாய் புலர்ந்திட
நடந்தான்''

''எல்லாம் உடைய நாயகி'' எனத் தேவி உபா சகரான பரஞ்சோதி கூறுவதிலிருந்து எத்தனை குண்டோதரர் வந்தாலும் அம்மை சோறு போட வல்லமையுள்ளவள் என்று குறிக்கிறார் என்பது தெளிவாகிறது. ஸ்ரீ லலிதாம்பிகையின் ஆயிர நாமங்களை எழுத ஆரம்பித்த மகான் ''ஓம் ஸ்ரீ மாத்ரேநம:'' என்று கூறினார். மாதா தன்குழந்தைகளை ஆதரிக்கக்கூடியவள்; ஏழையாய் இருந்துவிட்டால்! உலகத்திற்கெல் லாம் மாதாவான அவ்வம்மை ஒரு மகாராணி என்பதால் ''எத்தனை குழந்தைகளை வேண்டு மானாலும் காப்பாற்றுவாள்'' என்று தொனிப் பொருள் கிடைக்க அடுத்த நாமத்தை ''ஓம் மகாராஞயே நம:''(ஓம் மகா ராணியே நமஸ் காரம்) என்றார். மகாராணி ஒரு அரசாங்கத்தி லுள்ள குழந்தைகளையே காப்பாற்ற முடியும். ஒரு சக்கரவர்த்தினியாயிருந்தால் உலகம் பூரா வும் காத்தருள்வாள் என்பது தொனிக்க ''ஓம் சிம்மாசனேஸ்வர்யை நம;'' என்றார். மூன்று நாமாவளிகளையும் சேர்த்துப் பரஞ்சோதி எல் லாம் உடைய நாயகி எனக் குறிக்கிறார்.

மீனாட்சியம்மையார் தனது தோழியர் சிலரை அழைத்து, குண்டோதரனுக்கு உண வளிக்குமாறு கூற, அவனை அவர்கள் சமையல் அறையில் கொண்டுபோய்விட, அவன் அங்கு மலை மலையாகக் குவித்து வைத்திருந்த சாப் பாடு பூராவும் சாப்பிட்டு விடுகிறான். எப்படிச் சாப்பிட்டான் எனத் தெரியவில்லை. ஆனால் சாப்பாட்டு குவியல்களைக் காணோம். பழ வகைகள், கல்யாணத்திற்காகச் செய்திருந்த விசேடமான உணவுகள், சர்க்கரை, கரும்பு, தேங்காய் யாவற்றையும் சாப்பிட்டும் பசிதீரா மல் பச்சைக் காய்களையும், நவதானியங்களை யும் மூட்டைமூட்டையாகத் தின்று விடுகிறான். தின்னத் தின்னப் பசியதிகமாகிவிடுகிறது. இது கண்டு அதிசியமடைந்த அம்மை இறைவனை யடைந்து செய்தியைக் கூறுகிறாள். குண்டோத ரனும் அவ்விடத்தில் தோன்றி ''என் அன்னை மீனாட்சி அளித்த சோறு கொஞ்சமல்ல; நம் இமயமலை அளவு தந்தனள். அவ்வளவையும் சாப்பிட்டும் சாப்பிடாதவன் வயிறு காந்துவது போல் காந்துகிறதே'' என்றான்.

''நட்டமாடிய சுந்தர நம்ப நங்கைஎம்பிராட்டி
அட்ட போனகம் பனிவரை அனையவாய்க்
கிடந்த
தொட்டுவாய் மடுத்திடவும்என்சுடுபசி
தணியாது
இட்டுணாதவர் வயிறுபோல் காந்துதே
என்றான்''

''இட்டு உணாதவர் வயிறுபோல் காந்துவது'' என்பதன் மூலம் ஏழைகளுக்குச் சோறு போடு, பின்னர் சாப்பிடு, ஐயம் இட்டுண் என்ற முது மொழிப்படி ஏழைகளுக்குச் சோறு போடாத தவர் வயிறு எப்போதும் பசியெடுத்துக் காந் தும் எனச் சூசனையாகக் குறிப்பிடுகிறார் பரஞ் சோதி.

இது கண்ட இறைவன் தனக்குள்ளே சிரித் துக் கொண்டு அன்னபூரணி என்ற தேவியின் அம்ஸத்தை நினைக்க, ஏழு குழிகளில் தயிர்ச் சோறு தோன்றுகிறது. பாற்கடலுக்குள் மந்தர மலை விழுந்த மாதிரி அக்குழிக்குள் இறங்கிய



குண்டோதரன் அவ்வளவு சோற்றையும் அரை கணத்தில் விழுங்க, சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கும் பக்தர்களின் முன்வினைப் பாபங்களான பிராரப்தம் முதலானவை நீங்கிய மாதிரி பசி அடங்கிவிட்டது ''சுருதி நாயகன் தாள் பக்தி வைத்து வீடுணர்ந்தவர் பழவினைத் தொடர்போல்'' என்பது பரஞ்சோதியாரின் திருவாக்கு.

மனிதன் உணவுண்ணும் முறையிலேயே ஒரு தத்துவம் மறைந்து கிடக்கிறது. முதலில் அவன் சாப்பிடுவது குழம்புச்சோறு. குழம்பு என்பது தானுடன் கூடியது. (தான் என்பது இருந்தாலே குழம்பும் என்பது குறிப்பு). அடுத்த வகை ரசம், அதாவது தான் இல்லாதது. தான் என்பது இல்லாவிட்டால் தெளிந்திருக்கும் மனிதநிலையைக் குறிப்பது ரசம். (தற்காலத்தைப்பற்றி அன்பர்கள் கூறுவது என்காதில் விழுகிறது. தக்காளிபோட்ட ரசம்தானே என்று. காயோ, கறியோ ஒரு திரவத்தில் விழுந்துவிட்டால் அது குழம்பே ஆதலால் அது தக்காளிக் குழம்புதான்.) தெளிந்த நிலையில் இறைவனுடைய ருசியை அனுபவிக்கிறான் என்பதைக் காட்டவே இனிய பாயசம் பரிமாறுகின்றனர். பின் இறைவனின் இனிமையை அனுபவித்துக் கொண்டே உலகத் துன்பங்கள் நீங்கி இறைவனுடைய குளிர்ச்சி பொருந்திய நிழலில் அமர்ந்திருப்பார் என்பதைக் காட்டுவதே தயிர்ச்சோறு.

குண்டோதரன் தயிர்ச்சோறு சாப்பிட்டுப் பசி நீங்கினான் என்று கூறுவதன் மூலம் எவ்வளவு ஒருவர் சாப்பிட்டாலும் மோர் அல்லது தயிர்தான் அவருடைய பசியைத் தணிக்கும் என்பதையறிகிறோம்.

தயிர்ச்சோறு சாப்பிட்டுப் பசி நீங்கிய குண்டோதரன் தாகம் அடைந்து, மதுரையில் உள்ள கிணறு யாவும் வறண்டுபோகும்படி குடித்தபின்இறைவனிடம்''எவ்வளவு தண்ணீர் குடித்தும் தாகம் அடங்கவில்லையே!'' என முறையிட, இறைவன் தன் சடாமகுடத்திலிருக்கும் கங்கையிடம் ''தேவி! மதுரையின் வடபுறத்திலே ஒரு நதியாக வா!'' என்கிறார், ''இறைவனே! அன்று பகீரதனுக்காக உலகத்தில் நதியாக ஓடிவந்து உலக மக்களின் பாபங்களை போக்கு என்றீர்கள். இன்றும் அப்படியாகும்படி கட்டளையிடும் பட்சத்தில் அடியேன் நதியாக வந்தபின் என்னைத் தரிசனம் செய்தவர், கையால் தீண்டினவர், சிறிது ருசிபார்த்தவர் யாவருக்கும் நன்மை செய்யும் நதியாக நான் வர அருள் செய்யவேண்டும்'' எனக் கேட்க இறைவன் இணங்கினார்.

அவ்வாறே மதுரைக்கு வடபுறத்தில் கங்கை ஒரு நதியாக வர, நடுவில் இறங்கிய குண்டோதரன் தனது இருகைகளையும் நீட்டித் தண்ணீரைத் தடுத்து வாயில் விழும்படி

செய்து தாகம் தீர்ந்தான். சோறு கொடுத்த சொக்கநாதர் தண்ணீரும் கொடுத்த தரும மூர்த்தியாகிவிடுகிறார். தண்ணீர் குடித்த குண்டோதரன் மகிழ்ச்சி பொங்க அன்பே யுருவமான இறைவன் பாதத்தில் நின்று கொண்டு நல்ல வாக்கு ஏற்பட்டு, அழகிய பாடல்களைப் பாடி நின்று ஆனந்தமடைகிறான். மீனாட்சியம்மையும் சோமசுந்தர பெருமானையும் வணங்கக் கூடியவர்களிடம் யமன் வந்தால்கூட உத்தமபக்தனான குண்டோதரன் அவனைத் தடுக்க வந்து விடுவான் என்கிறார் ஒரு புலவர்.

''பண்டோதரிய மறைபாடும் கூடற் பசுங் கிளியை
கண்டோதினேன்; என் கவலையெல்லாம் இனிக்காலன் திரண்டு
முண்டோதி வந்திடும்போது அம்மைகோயில் முன்னே திரியும்
குண்டோதரன் கண்டால் துடைதட்டிக் கொள்ளுவானே''

இப்பேர்ப்பட்ட தெய்வீக நித்திய தம்பதிகளான மீனாட்சி அம்மையும் சோமசுந்தரப் பெருமானும் நம் நாட்டிலுள்ள அனைவரையும் காப்பாற்ற வேண்டுகிறோம்.

தம்மையடைந்தவரைக் காக்குந் தன்மையுடையவள் உலகநாயகியான அம்மை.

''அன்னையே! யானைத் தோலை உரித்து ஆடையாக அணிந்திருப்பவன் சிவபெருமான். வீடுதோறும் பிச்சை வேண்டுமென வாங்கிப் புசித்து வாழுபவன். காட்டில் பிசாசகளுடன் நடனம் செய்யக் கூடியவன். உலகத்தவரால் பித்தனென்று அழைக்கப்பட்ட இப்பெருமான் உன்னைத் திருமணம் செய்து கொண்டு அம்மி மிதிப்பதற்காக உன் திருவடியைப் பற்றினான். உன் திருவடியைத் தீண்டிய பெருமை மும்மூர்த்திகளில் முதல்வனாக அப்பெருமான் விளங்கும்படி செய்துவிட்டாயே! உன் கருணையே கருணை'' என்கிறார் வைரவன் கோயில் வடிவுடை நாயகி பிள்ளைத்தமிழாசிரியர்.

''அத்தரியுத் தகளைக் கலையாக
அணிந்து களிப் புறுவோன்
ஐயந்தம்மின் தெரிவை யிரென்ன
அகந்தொறு மேற்றுண் போன்
நத்துபு சுடலையினடலையை என்று
நயந்து தரித் திடுவோன்
நாணிலலென்பு புனைந்து பிசாசொடு
நாளு நடம் புரிவோன்
இத்தகு பித்தனை ஒரு காலம்மியில்
ஏற்றிய கையால் தொட்டு
இட்ட தவத்தால் தேவரின் மூவரின்
ஏற்றமுறச் செய்தாய்
சக்தி பராபரை வடிவுடைநாயகி
தாலோ! தாலேலோ!
தனிகர்கள் பரவிய வயிரவ பதியினள்
தாலோ! தாலேலோ''

மற்ற தேசங்களில் ஒரு அரசனின் மனைவி அரசியாக முடியும். ஆனால் அரசியை மணந்து கொண்டவன் அரசனாக முடியாது. நம் மீனாட்சி அம்மை அப்படியில்லை. பாண்டியன் மகளாகப் பிறந்து, கல்வி கற்று அரசியாகி, அரசை வகித்து, நந்தி முதலானவர்களை வென்றும், உலகமெல்லாம் தொழும் கணவனுக்கு மாலை சூட்டியதல்லாமல் தன் மகுடத்தை சூட்டி அரசளித்து அரசனாக்கிவிட்டாள் என்பது இத்தேசத்தின் தனிச்சிறப்பு என்கிறார்.

''செழியார் பிரான் திருமகளாய்க் கலைபயின்று
முடிபுனைந்து செங்கோலோச்சி
முழுதுலகுஞ் செயங் கொண்டு திறைகொண்டு
நந்தி கணமுனைப் போர் சாய்த்துத்
தொழுகணவற்கணி மணமாலிகை சூட்டி தன்
மகுடஞ் சூட்டிச் செல்வம்
தழையுறு தன்னரசளித்த பெண்ணரசி அடிக்
கமலம் தலைமேல் வைப்பாம்''.

இப்பேர்ப்பட்ட அங்கயற்கண்ணியம்மையும் ஆலவாயப்பனும் அனைவரும் பதினாறு பெறும் பெற்று பெறுவாழ்வு வாழ அருள்வாராக.

(தொடரும்)

---

## வழிபட்டால் உண்டு வாழ்வு

**ஆக்கையாற் பயனென் — அரன்**


**கோயில் வலம் வந்து**

**பூக்கையால் அட்டிப் போற்றி என்னாதஇவ்**

**ஆக்கையாற் பயனென்?**

**—அப்பரடிகள்**

---



# "அருபரத் தொருவன் அவனியில் வந்து குருபரன் ஆகி

**சக்திசுகன்**

மாணிக்கவாசகப் பெருமான், அரச பரிவாரங்களுடன் படைகள் புடைசூழ, மிக்க ஆரவாரங்களுடன் பல்லக்கின் மீதேறி கீழ்க் கடற்கரை நோக்கி, பாண்டி மாமன்னனுக்காக குதிரைகள் வாங்குவான் வேண்டி, பவனி சென்று கொண்டிருந்தபோது,

குருந்த வனத்திலிருந்து, ''ஓம் நமச்சிவாய'' என்று பன்முறை பல்லாயிரம் பேர் ஒரே குரலாகத் தெய்வீக பண்ணுடன் ஒலிக்க, அந்த மந்திரத்தால் ஆட்கொள்ளப்பட்டு, அக்குருந்தவனத்தை அடைந்து ஞானகுருவாக வீற்றிருந்த சிவனுக்கு அடிமையாகி, அவருடன் ஒன்றிவிட்டார்.

அந்த ஞான குரு வீற்றிருந்த தலம்தான் திருப்பெருந்துறையாகும்.

திருப்பெருந்துறை முன்னர் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து புதுக்கோட்டை மாவட்டத்தோடு இணைக்கப்பட்ட அறந்தாங்கி தாலுகாவின் தென்கிழக்கு கோடியில் அமைந்துள்ள ஒரு சிற்றூர்.

அங்குள்ள கலைக்கோயிலையும் ஊர்ப் பெருமையையும் கண்டறிய விரும்பும் அன்பர்கள் திருவாரூர்-காரைக்குடி புகைவண்டிப் பாதையில் அறந்தாங்கியில் இறங்கலாம். சாலை மார்க்கமாக வரும் அன்பர்கள் புதுக்கோட்டை பட்டுக்கோட்டை, காரைக்குடி முதலான ஊர்களிலிருந்து நேரடியாக வரும் பேருந்துகள் மூலம் இத்திருத்தலத்தை அடையலாம். இத்திருத்தலத்தின் திருப்பெருந்துறை என்ற பெயரை மக்கள் அறிய மாட்டார்கள். வழக்கிலுள்ள சொல் ஆவுடையார் கோயில் என்பது தான்.

மணிவாசகப் பெருமானால் திருப்பெருந்துறை என 200 இடங்களுக்கு மேல் திருவாசகத்தில் பாடப்பெற்றுள்ள தலத்திற்கு ஆவுடையார் கோயில் என்று பெயர் வழங்கும் காரணம் என்ன என்பது அறிய வேண்டாமா?

மற்ற எல்லா சிவாலயங்களில் இல்லாத ஒரு தனிச் சிறப்பும், ஆண்டவன் உருஅற்றவன் என்ற நிலையை உணர்த்தவும் கோயில் கருவறையில் லிங்கம் இல்லை - பீடம் மட்டும் உள்ளது.

அதனால் ஆவுடையை மட்டும் கோயிலாகக் கொண்டது ஆகையால் ஆவுடையார் கோயில் என காரணப்பெயர் நிலைத்து நின்றோங்குவதும் மறுபெயரான திருப்பெருந்துறை மறைந்துவிட்டதும் தெரிய வருகிறது.

இத்திருத்தலத்தில் அம்பாளுக்கும் உரு இல்லை. ஞான பீடமாக நமது அஞ்ஞானத்தை எல்லாம் விரட்டி ஓட்டும் நிலையில் தாமரை மலரின் மீது அம்பாளின் திருவடிகள் மட்டும் அமைக்கப்பட்டுள்ளதும் தனி ஒரு சிறப்பாகும்.

இக்கோயிலில் பிரிதொரு சிறப்பம்சம் சமயக் குரவர் நால்வரில் ஒருவரான மணிவாசகப் பெருமானுக்கே எல்லாத் திருவிழாக்களும், பூஜைகளும் நடைபெறுகின்றன.

பேரரசன் அரிமர்த்தன பாண்டியன் காலத்தில் மாணிக்க வாசகப் பெருமான் குதிரை வாங்குவான் வேண்டி அக்கால ஈழைத் துறை முகமாகிய மணமேல் குடி கடற்கரைக்கு வந்த இடத்தில், சிவபெருமானால் ஆட்கொள்ளப் பட்டு, குருந்த மரத்தடியில் உபதேசம்பெற்று அதனால் அவர் பாடிய பாசுரங்கள் திருவாசகம்

என வழங்கப் பெறுவதாகும். வாதவூரருக்கு சிவபெருமானே திருவாசகத்தில் திளைத்து, மாணிக்கவாசகன் என்று பெயராலழைத்தார் என்பது வரலாறு.

''சீரார் பெருந்துறையான் என்னுடைய
சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து''

இவ்வாசகத்திலிருந்து இறைவன் உள்ளத்தை இருப்பிடமாகக் கொண்டதாக அறிகிறோம். அதனால்தானோ என்னவோ இப்பெருமானுக்கு ஆத்மநாதன் என்ற பெயரும் வழங்குகிறது. ஆம் உண்மை; நம் உள்ளத்தில் உறைவது ஆத்மாதானே! அதற்கு உருவேது? அது ஒரு பண்புப் பெயரல்லவோ! சிவனும், சத்தியும் பண்புப் பெயர்தான் அதனால்தான் இங்கு உறையும் இறைவனுக்கும் இறைவிக்கும் உருவற்ற நிலையை வைத்தனர் போலும்.



மணிவாசகப் பெருமான் வாதவூரராக பாண்டிமன்னனுக்கு குதிரை வாங்க வந்து தங்கியபொழுது மறையோதும் முதியவரைக் கண்டு அன்னவரிடத்தில் வள்ளுவப் பெருமான் கூற்றுப்படி கண்டு, கேட்டு, உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல நுகர்ச்சிக்கும் அரிதானவர் என்று அறிந்து அடைக்கலம் கொண்டு அன்னவரிடம்

''செங்கை மீது பொருத்தமரும் புத்தகம் ஏதய்யா?''

என்று வினவ

பதிலாக அப்பெரியார்-''பொய்மையிலாச் சிவஞானபோதம்'' என்றார் மணிவாசகப் பெருமான் மதியூக மந்திரி அல்லவா? ஏன்? எப்படி? எதற்காக? என்று உய்த்துணரும் ஆவலில் ''சிவமேது ஞானமேது, இங்கு இலங்கிடும் போதமேது'' என்றார்.

அதற்குப் பெரியவர் ''நின்ற சிவம் ஒன்று, அத்னைத் தேர்தல் ஞானம், நிகழ் போதம் தேர்ந்ததனைத் தெளிதலாம்'' என்று உரை செய்தார்.

ஒன்றே சிவன், ஒருவனே தேவன் அதனை உய்த்துணர்தலே ஞானம், அந்த ஞானத்திலே திளைத்தல் போதம் என உணர்ந்ததும் மணிவாசகப் பெருமான் அன்னாருக்கு அடிமையாகி வந்த நிலை வருநிலை மறந்து இறைவனடி ஒன்றிவிட்டார் என அறிகிறோம்.

மணிவாசகப் பெருமான் இத்திருத்தலக் கருவறையும் அதனைச் சார்ந்த அர்த்த மண்டபத்தையும் மட்டுமே கட்டியுள்ளார். அவர் காலம் கற்றளி ஏற்படுவதற்கு முந்தையதாகையால் சிற்ப நுணுக்கமோ, கற்கோயில் அமைக்கும் முறையோ இன்றிக் கற்களை அடுக்கிக் கட்டப்பட்ட கோயிலாக இன்றும் காட்சியளிக்கின்றது.

இக்கோயில் ஊரின் நடுநாயகமாக தெற்கு முகமாக அமைந்துள்ளது. இக்கோயிலில் பிற சிவாலயங்கள் போல் நந்தியோ, கொடிக் கம்பமோ கிடையாது. இறைவனை, எங்கும் நின்ற பரம்பொருளை தெருவிலிருந்தே கண்டறியலாம். இறைவன் ஒளிப்பிழம்பு என்ற தத்துவத்தில் இக்கோயிலமைத்தனர் சிற்ப வல்லுனர்கள். கோயில் தெற்கு முகமாக இருந்தும் காலையில் கதிரவன் கருவறையில் பட்டு, அதேபோல் பகல் முழுவதும் ஒளிபடுகிறது. காலையில் நடைபெறும் நிழலோட்டங்கள் கருவறையில் தெரிவதோடு மாலையில் ஒடுங்கும் கதிரவன் ஒளியும் அங்குபடும் வண்ணம் ஆறு மண்டபங்களையும் (கருவறை உட்பட) அமைத்திருப்பது அக்காலத்தில் சிற்ப வல்லுநர்கள் வானநூல் வல்லுநர்களாகவும் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை இன்றும் நமக்கு இக்கோயில் எடுத்துக் காட்டி நிற்கிறது.

இதனையே திருவாசகத்தில் 'சோதியே சுடரே சூழொளி விளக்கே' என்று மணிவாசகப்

பெருமான் கூறுகின்றார் போலும். நாம் கோயில் வாயிற்படிகளை அடைந்ததும் அக் கோயிலின் தெற்கே ஒரு பெரிய திருக்குளத் தைக் காண்கிறோம். அதனை நெல்லியடிக் குளம் என்று வழங்குகின்றனர். இது இராம நாதபுரம் புராணத்தில் தேவ தீர்த்தம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இதனை இராமநாத புரம் சேதுபதி மன்னர்கள் வெட்டியதாகக் கூறப்படுகிறது. இக்குளத்தின் கரையில் கிழக்கு நோக்கி வல்லப கணபதி எழுந்தருளியுள்ளார். திருமூலர் திருமந்திரத்தில் கண்டபடி, 'ஐந்து கரத்தனை' என்று பாடியபடி இல்லாமல் ஊரில் பல சிறப்பு அம்சங்கள் இருப்பதுபோல் விநாயக ரும் பதினாறு கரங்களை உடையவராக இருக் கிறார். ஏனெனில் செல்வங்கள் 16 அல்லவா? அதனை அளிக்கும் வல்லவன் என்பதனைக் காட்டவோ அல்லது 16-ன் கூடுதல் 7 அல்லவா 'ஏழிசையாய் இசைப்பயனாய் இறைவன் உள் ளான்' என்பதை உணர்த்தவோ இவ்வாறு சிலை வடிக்கப்பட்டுள்ளது என எண்ணி மகிழ வைத்துள்ளனர் போலும். இவரையே நெல்லி யடி விநாயகர் என்றும் அழைக்கின்றனர். ஏனெனில் அங்கு ஒரு நெல்லி மரம் இருப்ப தால் மட்டும் அல்ல, நெல்லியின் குணநலம் யாவரும் உணர்ந்ததே. ஆப்பிளின் தன்மையை யும் குணத்தையும் உடையது நெல்லியாகும். மேலும்நெல்லிக்கனிஉண்ணுங்கால்முதலில்சற்று துவர்ப்பு இருக்கும். உண்டபின் தண்ணீர் குடித் தால்கூட இனிக்கும். அத்தன்மையைப் போல் இறைவனை அடைய சற்று சிரமப்பட வேண்டி யிருப்பினும் அதன் பலன் சாலோக, சாமீப, சாருப, சாயுஜ்ய பதங்களை அருள வல்லன. எனவேதான் நெல்லியடி விநாயகர் எனஅழைத் தனரோ என நம்மை எண்ண வைத்து அவரின் பதினாறு கரங்களின் தத்துவத்தில் எண் கணிதப்படி ஏழின் உருவப்பயனான 'ஏழிசை யாய் இசைப்பயனாய்'' என்கின்ற வாக்குக்கு இணங்க சப்த ஸ்வரங்களையும் அடக்கியுள்ள பேச்சுக்கு தலைவன் அவன். அவனை வணங்கி தொடங்கும் காரியம் யாவும் வெற்றியாகும்.

முன் மண்டப முகப்பில் மேல் விதானத் தில் சுதை வேலையால் குருந்த மரத்தடியில் சிவபெருமானிடம், மணிவாசகப் பெருமான் அன்று உபதேசம் பெற்ற நிலையையே உயிர்ப் பெற்று வந்தது போல் உயிர்ப்பித்து ஸ்தபதி அமைத்துள்ள காட்சியைக் கண்டு மலைத்துத் திகைத்து நிற்கிறோம்.

இம்மட்டோடு இல்லை இக்கலைத்திறன்; இன்னும் எத்துணை எத்துணை! காண வேண் டாமா? என்ற வியப்பிலும் மலைப்பிலும் உள் நுழைகிறோம். கருவறை ஒளிப்பிழம்பைத் தரி சித்துக் கொண்டே நுழைகிறோம்.

இக்கோயிலில் திரு. கணபதி ஸ்தபதி அவர்களாலேயே சிறப்பித்துக் கூறப்படும் கொடுங்கை வளைவைக் காண்கிறோம். செங் கோல் என்றால் நேரானது, வளையாதது என்று யாமறிவோம். கொடுங்கோல் என்றால் நேர்மையற்ற, முறையற்ற நிலையைக் குறிக் கும் சொல். அதாவது அது வளைந்த நிலை யைக் குறிக்கும் சொல்லாகிறது. இக்கோயிலின் மண்டப முகப்புகளில் சிற்ப வேலைப்பாடு நிறைந்த, கல்லையே வளைத்துத்தகடுகளாக்கிப் போட்டிருக்கும் கற்களுக்குத்தான் கொடுங்கை என்று வழங்குகிறார்கள். கொடுங்கையைப் பார்க்கும்போது சற்று நிமிர்ந்து பார்த்தால் நடுவில் ஒரு குரங்கு ஓடிவருவது போன்றும் உடும்பு ஒன்று உள்நோக்கி பற்றிச் செல்வது போன்றும் உள்ள சிற்பத்தைக் கண்டு திகைக் கிறோம். சிற்பி அவ்விரு உருவத்தையும் தத்துவப் பொருளாக அமைத்திருக்கிறார் என்ற கூற்றை பின்வரும் விளக்கத்திலிருந்து அறியலாம்.

உடும்பைப் போன்று இறைவனைப் பற்றி. னால் (திருக்கடையூரில் மார்க்கண்டேயன் இறைவனைப் பற்றியதுபோல்) வள்ளுவர் கூற் றின்படி 'பற்றுக பற்றற்றான்' என்பது போலும் அப்பர் பெருமான் ''பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில், பரகதிக்கு செல்வதொரு பரிசு வேண்டில்'' என்பது போலும், நம்மிட முள்ள ஆசாபாச ஆணவ கன்ம மலங்கள் நம்மை விட்டு (குரங்கு போன்ற சபல எண் ணங்கள்) ஓடிவிடும் என்ற தத்துவத்தைக் கூறத்தான் செதுக்கியிருக்கிறார் என்று எண்ண வைக்கிறது.

மேற்படி கொடுங்கையின் அடியில் வந்து அதனைக் கீழிருந்து உற்று நோக்கினால் மேற் படிஒவ்வொரு கொடுங்கைக் கல்லும் 13 அடி நீளம்4அடி கனமுள்ள கல்லை சிற்பி வளைத்து, அந்த ஒரே கல்லில் உருட்டுக் கம்பி, நாற் கோணப்பட்டை, அறுகோணப்பட்டை, முறுக்கு முக்கோணப்பட்டை, சதுரம் ஆகிய ஆறு பட் டைகளால் இணைத்தது போலவும், ஒவ்வொரு கட்டத்திலும் குமிழ் ஆணிபொருத்தியது போல வும், முன் வளைவு கீழ் தகட்டில் எண்ணற்ற அளவுகளும் (தற்போது நாம் கலையிடாஸ் கோப்பில் ஏற்படுத்தும் உருவப் பூக்கள் போல்) பல டிசைன்களில் போடப்பட்டுள்ளன. இதனை தற்போது காஞ்சிபுரம், திரிபுவனம், ஜலகண்டா புரம் போன்ற பகுதிகளில் உள்ள நெசவா ளர்கள் புடவைகளில் கரைகளை அமைக்க அனுமதி பெற்று பிளாக் எடுத்துச் செல்லுகின்றனர். அதிலிருந்தே அதன் கலை நுணுக்கத்தையும் அழகுற அமைக்கப்பட்ட தன்மையையும் பார்க்காதவர்களுக்கும் விளங் கும். இக்கோயிலுள் நுழைந்தால் ஒரே கலை மயம். சிற்பச் செல்வங்கள் நிறைந்திருக்கும் உள்ளும் புறமும் கலைவளம் செறிந்த கோயில்.

இவ்வாலயத்தில் அமைந்துள்ள கலைச் செல்வங்கள் யாவற்றையும் நீங்களே கண்ணார கண்டு மகிழ வேண்டுகிறேன்.

— — — —

# கந்தவேள் கருணை



டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார் [38]

வேற்படைக்குப் பின்னே சென்று வீர வாகுதேவர், ''பானுகோபனைக் கொன்றாலன்றிக் கந்தவேளைச் சேவிக்கச் செல்ல மாட்டேன். பானுகோபனைக் கொல்லவில்லையென்றால் வில்லுடன் நெருப்பில் புகுவேன்' என்று சபதம் செய்தார்.

அப்போது நள்ளிரவு, வீரவாகுதேவரும் துணைவர்களும் வீரமகேந்திரபுரியின் மேற்கு வாயிலை அடைந்தனர். நகரம் ஒரே வெற்றிக் களியாட்டமாயிருந்தது. பூத சேனைகள் கடல் உடைந்தாற்போல் ஆரவாரம் செய்தன. அந்த ஆரவார ஒலியைக் கேட்ட அவுணர்கள் வானை நோக்கினார்கள். அவர்களது உடல் வியர்த்தது. வெஞ்சினம் கொண்டார்கள். வாரிதியின் அடியில் அமுத்தப்பட்டவர் எப்படி மீண்டும் வாழ்வும் வலிவும் பெற்றனர் என வியந்து நடுங்கினர்.

வீரமகேந்திரபுரியின் மேற்கு வாயிலைப் புலிமுகன் என்பவன் காவல் காத்துக்கொண்டிருந்தான். மாயவளிடத்தில் தோன்றிய அவன் அறக்கடவுளையும் பிடித்துச் சிறை செய்தவன். தீச்சுடர் போன்ற உடலைக் கொண்டிருந்த அவன் நஞ்சினும் கொடியவன். அவன் நால்வகைப் படைகளுடன் பூத சேனைகளை எதிர்த்தான். பூத சேனைகளும் அவுணரும் கடும்போர் புரிந்தனர். புலிமுகனும் சிங்கன் என்னும் பூதசேனைத் தலைவனும் சூலப்படையுடன் போர் செய்தார்கள். இருவரும் சூலத்தினால் ஒருவரையொருவர் குத்தினர். சூலங்கள் இருவருடைய மார்புகளையும் பிளந்து கொண்டு முதுகில் புறப்பட்டன. இருவரது உடல்களினின்றும் உதிரம் பெருகியது. மீண்டும் மீண்டும் உடலில் பல இடங்களில் சூலத்தினால் குத்தி அவர்கள் போர் செய்தனர். இருவரிடத்துமிருந்த சூலங்கள் ஒடிந்து வீழ்ந்தன. சூலங்களை இழந்த இருவரும் மற்போர் செய்தனர். முடிவில் சிங்கன் புலிமுகனைக் கொன்றான்.

பின்னர் பூதசேனைகள் நகரத்திற்குள் புகுந்து மதில்களையும் மாளிகைகளையும் உதைத்துத் தள்ளி அழித்தார்கள். அவுணர்களைக் கூட்டம் கூட்டமாக அழித்தார்கள். வீரவாகு தேவர் அக்கினிப் படையையும் வாயுப் படையையும் ஏவி, ''இந் நகரத்தை எரியுங்கள்'' என்று பணித்தார். இரண்டு படைகளும் நகரை எரிக்கத் தொடங்கின. நகரின் சில இடங்கள் எரிந்தன; சில இடங்கள் கரிந்தன; சில இடங்கள் பொடிந்தன; சில இடங்கள் வெடித்தன; சில இடங்கள் புகைந்தன. சிவபெருமானின் திருமுறுவலால் முப்புரம் எரிந்ததுபோல் அந்நகர் எரிந்தது.

நகரம் எரிவதைக் கண்ட தூதர் சிலர் சூரபன்மனிடம் ஓடினார்கள். நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அவனுக்குத் தெரிவித்தனர்.

சூரபன்மன் மிகுந்த சினம் கொண்டான். ஒற்றர்களை அழைத்தான். ''நீங்கள் எல்லோரும் ஆகாயத்துக்குட்புகுந்து சென்று, உலகனைத்தையும் ஊழிக்காலத்தில் அழிக்கச் செய்வதற்காக உறங்கிக் கொண்டிருக்கும் மேகங்களை இங்கே அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டான், அதன்படி ஒற்றர்கள் ஆகாயத்துக்குச் சென்று மேகங்களைச் சூரபன்மனிடம் அழைத்து வந்தார்கள் ''மேகங்காள்! இந்நகரத்தை எரிக்கின்ற தீயை அணையுங்கள்' என்று பணித்தான் சூரபன்மன். அவனது ஆணைப்படி ஊழிமேகங்கள் மழை பொழிந்தன. அதனால் தீ தணிந்தது.

மழை பொழிந்து தீ அணைந்ததைக் கண்ட வீரவாகு தேவர் தீயை மேகங்கள்தான் அழித்தனவோ அல்லது இதுவும் அவுணர்களின் மாயமோ என்று பலவாறாக யோசித்துக் கொண்டிருந்தார்.

நாரத முனிவர் அங்கு தோன்றினார். சூரபன்மனின் கட்டளைக்கிணங்க ஊழிக்காலத்து மேகங்கள் இந்தத் தீயைத் தணித்தன, 'வீரரே! இதற்கு மாற்றாக வடவாமுகாக்கினிப் படையைச் செலுத்துங்கள்' என்று கூறிவிட்டு மறைந்தார்.

வீரவாகுதேவர் வடவாமுகாக்கினிப் படையைச் செலுத்தினார். அப்படைவிரைந்து சென்று மேகக் கூட்டங்களில் உள்ள நீரைக் கடிதில் உண்டு வீரவாகுதேவரிடம் திரும்பி

வந்தது. எதிரிக்கு உதவி செய்த போதிலும், வலிவிழந்து நின்ற முகிற் கூட்டங்களிடமும் கந்தவேள் கருணை பாலித்தார். வலிமை பெற்ற அம்மேகங்கள் நகரினின்று வெளி யேறிப் பெரும் புறக் கடலை நோக்கி ஓடின. பூதசேனைகள் பெரும் ஆரவாரம் செய்தன. தேவர்கள் பூமழை பொழிந்தார்கள்.

நடந்தவற்றை அறிந்து ஆறாத சீற்றம் கொண்ட சூரபன்மன், ''நானே சென்று பூத சேனைகளையும் வீரவாகுதேவரையும் மற்றை யோரையும் கொன்று அந்த முருகனையும் வென்று வருகின்றேன். எனது தேரைக் கொண்டு வருக'' என்று ஆணையிட்டான்.

சூரனின் மகனாகிய இரணியன் எழுந்தான். அவனுக்கு மூன்று தலைகள், அவன் மாயங் களையும் வஞ்சனைகளையும் கற்றிருந்தாலும் சிறந்த நீதிமான்; நல்லவன்.

இரணியன் தந்தையிடம் கூறலானான்;

''தந்தையே: நாம் தேவரைச் சிறையில் அடைத்திருக்கின்ற தன்மையால் வருவது பாவமேயாகும்; அதனால் வேறு நன்மை யில்லை; எல்லாம் தெரிந்தஅண்ணலே! நமது செல்வமும் இதனால் அழியும், நம் உயிர் போவதும் உண்மை.

''தேவரை நாம்சிறைசெய்த தன்மையால்
ஆவது பாவமே ஆக்கம் வேறிலை
யாவையும் உணர்ந்திடும் இறைவ திண்ணமே
போவது நம்உயிர் திருவும் பொன்றுமால்''

அச்சத்தைத் தருங் கானகத்தில் மறைந்து வாழும் புன்மை நீங்கி பிருதிவி யண்டங்கள் பலவற்றை அரசாண்டு பெருஞ்சிறப்புடன் இச் செல்வ நிலையில் வாழ்கின்ற பெருமையை நீர் யாரிடம் பெற்றீர்? இதனைச் சிந்திப்பீராக.

''சூருடைக் கானகம் தோற்றும் புன்மைபோய்ப்
பாரிடைப் புவனமோர் பலவும் போற்றியே
சீருடைத் தாகிஇத் திருவின் வைகுதல்
ஆரிடைப் பெற்றனை அதனைத் தேர்திநீ.

நாம் முன்னே நாராயணரை வென்றதும், பிரமதேவரையும் முனிவர்களையும் ஏவல் புரியுமாறு அடிமை கொண்டதும், மேன்மை யால் உயர்ந்த தேவர்களைத் துன்பம் புரிந்த தும் சிவபெருமான் அருளிய வலிமையினா லன்றோ?

''மாலை முன் வென்றதும் மலர் அயன்றனை
ஏலறு முனிவரை ஏவல் கொண்டதும்
மேலுயர் அமரரை விழுமஞ் செய்ததும்
ஆலமர்க்கடவுள்தன் ஆற்றலால் அன்றோ?''

தந்தையே! நீர்புரிந்த தவத்தினை நோக்கி அளவற்ற வரங்களைத் தந்தருளிய சிவ பெருமான், ஒரு தீமை காரணமாக அவ்வரங் களை மாற்றத் திருவுளங் கொள்வாராகின், நாம் மாறுபடுவதை விடுத்து அவரை வணங்கித் துதிப்பதுவே முறை; போர் செய்வது தகுமோ?

''நோற்றிடு தவத்தினை நோக்கி எண்ணிலாப்
பேற்றினை உதவிய பிரான்ஓர் தீமையால்
மாற்றிட உன்னுமேல் வணங்கி மாறொருரீஇப்
போற்றுதல் அன்றியே பொரவுஞ் செய்யுமோ''

ஒப்பற்ற ஒரு உதவியைப் புரிந்தோரு டைய மனம் வருந்துமாறு ஒரு தீமையைப் புத்தி பூர்வமாகச் செய்வாராயின், அத்தீவினை யாளரை முன் அவர் புரிந்த நன்றியே அழித்து விடும்; அவரையழிக்க வேறு கூற்றுவன் வேண் டியதில்லை. நன்றிகொன்றோருக்கு உய்வு கிடையாது.

''ஒன்றொரு பயன்றனை உதவினோர் மனங்
கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்
புன்தொழில் அவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ?''

எந்தையே! சடைமுடியுடைய சிவபெரு மான் மன்மதனைப் பார்வையால் எரித்ததை யும் முன் முப்புரங்களை நகையினால் கொளுத் தியதையும் அந்தகாசுரனை சூலத்தில் சுழன்று மாயுமாறு புரிந்ததையும்நீர்கேட்கவில்லையோ?

''கட்டுசெஞ் சடைமுடிக் கடவுள் காமனைப்
பட்டிட விழித்ததும் பண்டு மூவெயில்
சுட்டதும் அந்தகன் சுழலச் சூலமேல்
இட்டதும் கேட்டிலை போலும் எந்தைநீ.''

இயமனை உதைத்தருளியதையும், உலகை அழிக்குமாறு செருக்குடன் வந்த கங்கையின் பெருக்கையும் தருக்கையும் மாற் றிச் சடையில் தரித்ததையும், மாலயனாதி வானவர் அஞ்சி ஓடி ஒளிக்குமாறு வந்த ஆலகால விடத்தை உண்டருளியதையும் நீர் அறியீரோ?

''காலனை உதைத்ததும் கங்கை என்பவள்
மேல்வரும் அகந்தையை வீட்டிக் கொண்டதும்
மாலயன் அமரர்கள் இரிய வந்ததோர்
ஆலம துண்டதும் அறிகி லாய்கொலோ.''

ஒரு நரசிங்கமானது தேவர்களை அலைக்க அதனை நோக்கிய சிவபெருமான் வீரபத்திர மூர்த்தியாகிய சரபப் பட்சியால் தண்டனை புரிந்ததும் தக்கனுடைய யாகத்தை அந்த வீர பத்திரரால் அழித்ததனையும் நீர் கேட்ட தில்லையோ?

''அண்டரை ஓர்அரி அலைப்ப அன்னது
கண்டநஞ் சுடையவன் கருதி வீரனால்
தண்டம திழைத்ததும் தக்கன் வேள்வியை
விண்டிடு வித்ததும் வினவி லாய்கொலோ.''

தாமரைமீது வாழும் பிரமதேவர் தம்மை யிகழச் சிவபெருமான், வயிரவக் கடவுளை யனுப்பி அவருடைய உச்சித் தலையை நகத் தால் கிள்ளுமாறு புரிந்ததும், திருமாலிடம் உதிரப் பலிபெறுமாறு செய்ததையும் நீர் அறியீரோ?



''கடிமலர் மேலவன் இகழக் கண்ணுதல்
வடுகனை ஏவிவள் ளுகிரின்; அன்னவன்
முடிகளை வித்ததும் முகுந்தன் தன்னிடை
அடைதரு வித்ததும் அறிகிலாய் கொலோ''.

உலகங்களை அழிக்க முயன்ற திருமாலாகிய பன்றியின் கொம்பையும், அந்த நாராயணராகிய ஆமையின்ஓட்டையும், பிரமா முதலிய தேவர்களது தலைகளையும் அரனார் அணிகலன்களாக அணிந்ததை நீர் அறியீரோ!

''ஏமுற உலகடும் ஏனக் கொம்பினை
ஆமையின் ஓட்டினை அணிந்த தன்மையும்
பூமலர் மிசையவன் முதல புங்கவர்
மாமுடி அணிந்ததும் மதிக்கிலாய் கொலோ.''

தந்தையே! ஆதலினால் சிவபெருமானை அடுத்தவர் உய்வு பெறுவர். அல்லாத மூடர்கள் யாவராயினும் உய்வு பெற மாட்டார். இந்த உண்மை வேதாகமங்கள் எல்லாம் கூறும் உயர்ந்த உறுதிப் பொருளாகும். நீ புன்னெறியை விடுத்து நன்னெறியை அடைந்து இப்பொருளை உணர்வீராக.

''ஆதலால் ஈசன் தன்னை அடைந்தவர்
உய்வர் அல்லாப்
பேதையர் யாவ ரேனும் பிழைக்கலர் இனைய
வாய்மை
வேதநூல் பிறவும் கூறும் விழுப்பொரு ளாகும்
நீயும்
ஏதமா நெறியின் நீங்கி இப்பொருள் உணர்தி
எந்தாய்''.

உலகை அகழ்கின்ற திருமாலாகிய பன்றியின் கொம்பை ஒரு கரதலத்தால் பற்றி விண்ணில் சுழற்றி, அவ்வராகமூர்த்தி துதி செய்தபின், அதன் கொம்பை வாங்கி சிவபெருமான் திருமார்பில் தரிக்க முருகவேள் தந்தார் என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

''அங்கண்மா ஞாலந் தன்னை மேலினி அகழு
மோட்டுச்
செங்கண்மால் ஏனயாக்கை எயிற்றை ஓர்
சிறுகைபற்றி
மங்குல்வா னுலகிற்சுற்றி மருப்பொன்று
வழுத்தவாங்கித்
தங்கள்நா யகற்குச் சாத்தச் சண்முகன்
அளிக்கும் என்பர்'

அரசே! ஆறுமுகக் கடவுளாகிய எம்பிரானை, ஈசனிடம் உதித்த பாலகன் என்று இகழாதீர்! அப்பெருமான் செய்கையால் பெரியவர். ஒரு கற்ப காலத்தில் சிவமூர்த்தியின் புன்னகையில் தோன்றும் சிறிய நெருப்புப் பொறி உலகங்களையெல்லாம் அழிக்கும்.

''அறுமுகத் தொருவ னாகும் அமலனை
அரன்பால் வந்த
சிறுவன்என் றிகழல் மன்னா செய்கையால்
பெரியன் கண்டாய்
இறுதிசேர் கற்பகம் ஒன்றில் ஈறிலாத
வன்பால் தோன்றும்
முறுவலின் அழலு மன்னோ உலகெலாம்
முடிப்பதம்மா.''

மாதவன் கூர்ம அவதாரம் எடுத்து அமுதம் பெற உதவிய பின்னரும் தம்மை விடச் சிறந்தோர் ஒருவரும் இல்லை என்று செருக்குற்று உலகுக்குத் துன்பம் செய்தார். பிரமாதி தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டுக் கொண்டனர். கறைமிடற் றண்ணல் தமது மடித்தலத்தில் எழுந்தருளி யிருந்த கந்தப் பெருமானை அனுப்பினார். குமாரக் கடவுள் திருப்பாற்கடலை அணுகி ஒரு ஹுங்காரம் செய்தார். அதனைக் கேட்ட அளவிலேயே ஆமை மூர்ச்சித்தது. ஆமையைக் கொல்லாது அதன் ஓட்டினை மட்டும் பெயர்த்துக் கொண்டு போய்ச் சிவபெருமான் முன் வைத்தார். சிவபெருமான் கந்தவேளை அணைத்து ஆமையின் ஓட்டைப் பிரம விஷ்ணுகளின் சிரமாலைக்கு நடுநாயகமாகத் தரித்துக் கொண்டார்.

''அப்பா! இவ்வாறு செயற்கரிய செய்த முருகப் பெருமான் தன்னந் தனியனாக எதையும் செய்வான். இன்னொருவரின் சகாயம் அவருக்குத் தேவையில்லை. அசகாய சூரர் என்று அவருக்குப் பேர் வந்தது இதனால் தான். அவரைச் சிறுவன் என்று இகழாதே'' என்று கூறினான் இரணியன். பிள்ளை பிராயத்தில் குமாரக் கடவுள் புரிந்த அற்புதங்களையும் எடுத்துக் கூறினான்.

''வாசவன் குறையும் அந்தண் மறையவன்
குறையும் மற்றைக்
கேசவன் குறையும் நீக்கிச் சேடிலாவெறுக்கை
நல்க
ஆசிலோர் குழவி போலாய் அறுமுகங்
கொண்டான் எண்டோள்
ஈசனே என்பதல்லால் பிறிதொன்றை
இசைக்க லாமோ?

இவ்வாறு இரணியன் சூரபன்மனுக்கு முருகப் பெருமானின் பேராற்றலை எவ்வளவோ எடுத்துச் சொன்னான்.

இரணியன் கூறிய அறவுரையைச் சூரபன்மன் கேடகவில்லை.

''கரங்கள்பன் னிரண்டு கொண்ட கடவுள்வந்
தெதிரிக்கின் நந்தம்
வரங்களும் படைகள் யாவும் மாயையும்
திறலும் சீரும்
உரங்களும் திருவும் எல்லாம் ஊழிநாயகன்
முன் உற்ற
புரங்களும் அவுண ரும்போல் பூழிபட்
டழிந்திடாவோ''

ஆறுமுகக் கடவுளே போர் செய்ய நினைத்து வந்தால் எல்லா உலகங்களும் அழிந்து விடும்; நாம் பெற்ற செல்வங்களும் வளங்களும் வரங்களும் பிறவும் அழிந்துவிடும். முருகக் கடவுள் இதுகாறும் போருக்கு வராதது நம்மீது வைத்துள்ள கருணையினால்தான். அக் கடவுளுடைய திருவுள்ளத்தில் நம் மீது அழியாத கோபம் உண்டாவதற்கு முன் இப்பொழுது தேவர்களைச் சிறையிலிருந்து நீக்கி நம்முடைய உறவினர்களோடு விரைந்து சென்று அவருடைய திருவடிகளைச் சரணடைந்தால், அவர் நம்முடைய பிழைகளை யெல்லாம் பொறுத்து அருள்புரிவர். மேலும் பல அளவில்லாத வரங்களைத் தந்து இவ்விடத்தைவிட்டு சேனைகளோடு திரும்பிவிடுவர்; நாமும் உய்வோம். இதனை நன்கு ஆராய்ந்து சொன்னேன். இதுவே சிறந்த நன்மை பயக்கும் என்று கூறினான்.

இரணியனுடைய அறிவுரையைக் கேட்ட சூரபன்மன் ஆலகாலம் போல் கொதித்தான். அவனது உடல் வியர்த்தது; இதழ்கள் துடித்தன. கண்கள் சிவந்தன. கைகொட்டிச் சிரித்தான். இரணியனைப் பார்த்து, ''அறிவிலியே! நீ ஒரு சிறுவனின் ஆற்றலைப் பற்றியும், தூதனின் வீரத்தைப் பற்றியும் நான் செய்யவேண்டுவது என்ன என்பது பற்றியும் சொன்னாய். இவற்றையெல்லாம் உனக்குச் சொல்லிக் கொடுத்தது யார்? சொல். அவனை இப்பொழுதே கொல்கிறேன். அவனை மட்டுமல்ல; அவனது குலத்தையே வேரறுக்கின்றேன். அது மட்டுமல்ல; இன்னொருமுறை இப்படி ஏதேனும் பேசினால் உன்னையே இமயபுரத்துக்கு அனுப்பவும் தயங்க மாட்டேன்'' என்று வெகுண்டுரைத்தான்.

இரணியன், 'விதியை யாரால் வெல்ல முடியும்? தந்தைக்கு அழிவு காலம் வந்துவிட்டது. அவர் இறப்பதற்கு முன் நாம் இறந்துவிடுவது நலம்' என்று எண்ணினான். சூரபன்மனை வணங்கி, ''அப்பா! சிறுவனாகிய நான் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளுங்கள். நான் போருக்குச் செல்கிறேன். விடைகொடுங்கள்'' என்று வேண்டிக் கொண்டான். இரணியனின் சொல் சூரபன்மனின் சினத்தைத் தணித்தது. மகனை தழுவி மகிழ்ந்து விடை கொடுத்து அனுப்பினான்.

இரணியன் போர்க்கோலம் புனைந்து ஆயிரம் சிங்கங்கள் பூட்டப்பெற்ற தேரில் ஏறிப் போர்க்களம் சென்றான். ஆயிரம் தோழர்களும், ஆயிரம் சேனாதிபதிகளும், நாலாயிரம் வெள்ளம் சேனைகளும் அவனுடன் சென்றன.

இரணியன் போருக்கு வந்தபோது நாரதர் வீரவாகு தேவரிடம் தோன்றி, ''இவன் சூரபன்மனின் மகன். பெரிய மாயாவி. இவனை வெல்ல உம்மையின்றி வேறுயாராலும் முடியாது'' என்று கூறி மறைந்தார்.

முதலில் இரணியனுக்கும் நீலன் என்ற பூத சேனைத் தலைவனுக்கும் போர் நடந்தது.

நீலன் இரணியனை உதைத்து உருட்டி மிதித்தான். அதனால் இரணியனின் தலையும் மார்பும் பிளந்தன. அவன் வாயிலிருந்து உதிரம் கொட்டியது. அந்த நிலையில் அவன் ஒரு மாயா மந்திரத்தை உச்சரித்தான். இரணியனைப் போல் இன்னோர் உருவம்உண்டாயிற்று. அதனுடன் நீலன் பலவாறு திரிந்து போர் செய்தான். அம்மாய வடிவத்தின் தலையில் தண்டத்தால் அடித்தான் நீலன்.

(தொடரும்)

# நால்வர் காட்டிய வழி

நாங்கூர் எஸ். ஈஸ்வரன், எம்.ஏ.



| குரவர் | இறைவனுடன் கொண்டஉறவு | நெறியின் பெயர் | மார்க்கம் | தத்துவச் சுருக்கம் |
|---|---|---|---|---|
| அப்பர் | எஜமானன்- அடிமை (வேலையாள்) | தொண்டர் நெறி | தாசமார்க்கம் என்னும் சாலோக்கியம். | சிவனின் லோகத்தில் பணிபுரிதல் சாலோக்கியம், தொண்டுதான் வழிபாடு. ஞானத்தில் கர்மம், கடவுளை எஜமானனாகக் கருதினார் அப்பர். |
| சம்பந்தர் | தாய்- குழந்தை | மகன்மை நெறி | சத்புத்ர மார்க்கம் என்னும் சாமீப்யம் | கடவுளுக்கு சமீபமாகச் செல்லுதல், சாமீப்யம், அவனை தாயாகக் கருதி ஞானப்பால் பருகிய குழந்தையே சம்பந்தர். ஞானத்தில் பக்தி. |
| சுந்தரர் | நண்பன்- நண்பன் | தோழமை நெறி | சகமார்க்கம் என்னும் சாரூப்யம் | இறைவனுடன் தோழனாக சார்ந்து நின்றவர் சுந்தரர் - சாரூப்யம். இறைவனையே தூதுவிட்டவர். ஞானத்தில் யோகம் |
| மணிவாசகர் | குரு-சீடர் ஐக்கியநிலை | ஞான நெறி | சன்மார்க்கம் என்னும் சாயுஜ்யம் | இறைவனை குருவாக ஏற்றார் மணிவாசகர். சாதாரணமாக சார்ந்து நில்லாது, இரண்டறக் கலந்த ஐக்கிய நிலை- சாயுஜ்யம். ஞானத்தில் ஞானம். |

# சோழநாட்டு வைணவத் திருத்தலங்கள்

நித்திலக்கோ

முன்தொடர்ச்சி

## 19. திருநாகை (நாகப்பட்டினம்)

சௌந்தரியராசப் பெருமாள்-சௌந்தரிய வல்லி.

பிணியவிழ் தாமரை மொட்ட லர்த்தும்
பேரரு ளாளர்கொல்? யானறியேன்,
பணியுமென் நெஞ்சமி தென்கொல் தோழி
பண்டிவர் தம்மையும் கண்டறியோம்
அணிகெழு தாமரை அன்ன கண்ணும்
அங்கையும் பங்கயம் மேனி வானத்து
அணிகெழு மாமுகி லேயு மொப்பர்
அச்சோ ஒருவர் அழகியவா!

—பெரியதிருமொழி.

(பிணி-கட்டு; பங்கயம்-தாமரை)

இக்கோயில் நாகப்பட்டினம் நகரத்தில் இருக்கின்றது. இங்கு நாகைக்காரோணம் என்ற தேவாரம் பெற்ற சிவன் கோயிலும் இருக்கின்றது.

திருமங்கையாழ்வாரின் ஒரு திருமொழியை (10 பாசுரங்கள்) பெற்ற பழம்பெரும் கடற் கரைப்பட்டினம்.

வடிவழகிய நம்பி-அழகிய வல்லி நாச்சி யார் என்பன இங்குள்ள இறைவன் இறைவி யின் தனித் தமிழ்ப் பெயர்கள்.

## 20. திருநறையூர் (நாச்சியார்கோயில்)

நம்பி, நம்பிக்கை நாச்சியார்.

முருக்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னை கேள்வன்
மன்னெல்லாம் முன்னவியச் சென்று, வென்றிச்
செருக்களத்துத் திறலழியச் செற்ற வேந்தன்
சிரந்துணிந்தான் திருவடிநும் சென்னி வைப்பீர்
இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபது செய்(து) உலகம்ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே.

—பெரிய திருமொழி.

(துவர்-சிவப்பு பவழம்; இலங்குதல்-விளங்குதல்)

எம்பெருமானிருக்கும் கட்டுமலைக்கு சுகந்தகிரி (நறுமலை) என்று பெயர். கும்ப கோணம்-குடவாசல் நெடுஞ்சாலையில் கும்ப கோணத்திலிருந்து ஆறுகல் தொலைவு.

திவ்வியப்பிரபந்தப் பாடல் பெருக்கத் தில் இத்தலம் ஐந்தாவதாக நிற்கின்றது. அனைத்தும் (110 பாசுரங்கள்) திருமங்கை யாழ்வார் பாடியருளியவை.

இத்தலத்தில் நறையூர்சித்தீச்சரம் என்ற தேவாரம் பெற்ற சிவன் கோயில் இருக்கின்றது.

நம்பி என்றால் பூரணர் (நற்குணங்கள் நிரம்பியவர்) என்பது ஒரு பொருளாகும்.

அரங்கத்தம்மானுக்கு மதிள் எடுத்த மங்கை மன்னன், இருமடல் பிரபந்தங்களை அருளிச் செய்துள்ளார்.

சீடர்களுக்குத் திருவிலச்சினை புரிந்தரு ளும் கோலத்தோடு நிற்கிறார் திருநறையூர் நம்பி.

கல்லிலே உள்ள கருட சேவை இங்கு தனிச் சிறப்பு. கருடாழ்வாருக்கு அமுதக்கலசம் (கொழுக்கட்டை) நைவேத்தியம்.

## 21. நந்திபுர விண்ணகரம் (நாதன்கோயில்)

ஜகந்நாதன், நாதநாதன்,
விண்ணகரப் பெருமாள், சண்பகவல்லி,

தீதறு நிலத்தொடெரி காலினொடு நீர்கெழு
விசும்பும் அவையாய்,
மாசறு மனத்தினொ டுறக்கமொ டிறக்கையவை
யாய பெருமான்
தாய்செற வுளைந்துதறி ருண்டுகுட மாடுதட
மார்வர் தகைசேர்,
நாதனுறை கின்றநகர் நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே!

—பெரியதிருமொழி

(செறுத்தல்-அடக்குதல், கோபித்தல்; உளைந்த -வருந்திய; தட-பெரிய; தகவு- நற்குணம், தகுதியான உபகாரம், தகை-தகுதி, கால்- காற்று; விசும்பு-வானம்)

கும்பகோணத்திலிருந்து தெற்கே 3 கல் தொலைவு. திருமங்கையாழ்வார் ஒரு திருமொழியால் மங்களாசாசனம் செய்துள்ளார். திருவல்லிக்கேணியில் தொண்டையர்கோன் போலவும், பரமேச்சுர விண்ணகரத்தில் பல்லவன் மல்லையர் கோன் போலவும், அட்டபுயகரத்தில் வயிரமேகன் போலவும், திருநறையூரில் செங்கணான் கோச்சோழன் போலவும், நந்திபுர விண்ணகரத்தில் நந்திவர்மன் சில திருப்பணிகள் செய்தனன்.

## 22. திரு இந்தளூர்

மருவினிய மைந்தன், சுகந்தவன நாதன், பரிமளரங்கன்.

சந்திரசாப விமோசன வல்லி, புண்டரீகவல்லி.

முன்னை வண்ணம் பாலின் வண்ணம்
முழுதும் நிலைநின்ற
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம்
வண்ணம் எண்ணுங்கால்
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம்
புரையுந் திருமேனி
இன்ன வண்ணம் என்று காட்டீர்
இந்த ளூரீரே.

—பெரிய திருமொழி.

(கொண்டல்-காளமேகம்,; புரை- ஒப்பு)

இந்து (சந்திரன்) சாபம் நீங்கியபடியால் இந்தளூராயிற்று.

திருமங்கையாழ்வார் ஒரு திருமொழியிலும், பெரிய திருமடலிலும் மங்களா சாசனம் செய்துள்ளார். (ஆக.11).

மயிலாடுதுறை இரயில் நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு.

ஸ்ரீரங்கம் ஆதிரங்கம்; திருக்குடந்தை மத்தியரங்கம்; இந்தளூர் அந்திய ரங்கம்.

## 23. தில்லைத் திருச்சித்திரக்கூடம் (சிதம்பரம்)

கோவிந்தராசப்பெருமாள். புண்டரீகவல்லி.

அங்கண்நெடு மதிள்புடைசூழ் அயோத்திஎன்னும்
அணிநகரத்(து) உலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி
விண்முழுதும் உயக்கொண்ட வீரன்றன்னை
செங்கண்நெடுங் கருமுகிலை இராமன்றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
எங்கள்முனி முதல்வனை எம்பெருமான்றன்னை
என்றுகொலோ கண்குளிரக் காணும்நாளே!

—பெருமாள் திருமொழி

சக்ரவர்த்தித் திருமகனுக்கு வடநாட்டுச் சித்ர கூடத்தைப் போல் இத்தலமும் ப்ரீதி.



சிதம்பரம் நடராசப் பெருமான் கோயிலுக்குள் சந்நிதிக்கு நேராக இக்கோயில் இருக்கிறது.

குலசேகரப் பெருமாள் ஒரு திருமொழியும் திருமங்கையாழ்வார் இரு திருமொழியும் இணைந்து 32 பாசுரங்கள் பாடியுள்ளனர்.

ஸ்ரீதேவி பூதேவி கீர்த்திதேவி(நீளாதேவி) என மூன்று திவ்ய மகிசிகளுடன் எழுந்தருளியுள்ளார் பெருமாள்.

## 24. காழிச் சீராம விண்ணகரம்

தாடாளன்-மட்டவிழுங்குழலி.

ஒருகுறளா இருநிலம் மூவடிமண் வேண்டி
உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும்
தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த
தாடாளன் தாளணைவீர்! தக்க கீர்த்தி
அருமறையின்திரள்நான்கும் வேள்வி ஐந்தும்
அங்கங்கள் அவை ஆறும் இசைகள் ஏழும்
தெருவில்மலி விழாவளமும் சிறக்கும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மின் நீரே!

—பெரியதிருமொழி.

தாடாளன்-பெருமை பொருந்தியவன்.

வேள்வி ஐந்து-தினப்படி வேதத்தில் ஒவ்வொரு ப்ரச்நம் ஓதும் பிரம்மயக்ஞும், அக்னிஹோத்தரம் புரியும் தேவயக்ஞும், பிராணிகட்குப் பலியிடும் பூதயக்ஞும், பித்ருக்களை உத்

தேசித்துத் தர்ப்பணம் விடும் பித்ருயக்ஞம் விருந்தாளிகட்கு உணவு முதலியன கொடுக்கும் மநுஷ்யயக்ஞும்-எனும் பஞ்சமகா யக்ஞுங்கள்.

சீட்சை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம். ஜ்யோதிஷம். கல்பம் என வேதாங்கங்கள் ஆறு. சீட்சை-எழுத்துக்களை உச்சரிக்கும் முறை; வியாகரணம் நிருக்தம்-பொருட்சிறப்பும் பாகு பாடும் கூறும் இலக்கணம்; சந்தஸ்-சந்தங்கள்; ஜோதிடம்-காலத்தைக் கணித்து அறிவிப்பது. கல்பம்-வைதிக கருமங்கள் அநுஷ்டிக்க வேண்டிய முறைமைகளை விவரிப்பது.

சீர்காழி இரயில் நிலையத்துக்குக் கிழக்கே அரைகல்லில் இருக்கும் ஷேத்திரம். திருமங்கையாரின் ஒரு திருமொழியைப் பெற்றது.

திருவிக்ரமாவதாரச் சிறப்பை எடுத்துரைக்கும் மேற்கண்ட பாசுரம், ஆழ்வாரின், 'திருவெழு கூற்றிருக்கை'க்கு முன்னோடியாய் அமைந்துள்ளது.

## 25. கூடலூர் (ஆடுதுறைப்பெருமாள் கோயில்)

வையம் காத்த பெருமாள், பத்மாசனவல்லி.

''பெருகு காதல் அடியேன் உள்ளம்
உருகப் புகுந்த ஒருவர் ஊர்போல்
அருகு கைதை மலர, கெண்டை
குருகென் றஞ்சும் கூடலூரே''

போல் என்பது அசைச்சொல். அருகல்-சமீபம், கைதை-தாழை, குருகு-நாரை, தேவர்கள் சேவிக்கக் கூடிவந்தபடியால் கூடலூர் ஆயிற்று.

மங்கையார் ஒரு திருமொழியால் இங்குள்ள 'ஜகத்ரட்சகனை' மங்களாசாசனம் புரிந்துள்ளார்.

பாபநாசத்தினின்றும் ஐந்துகல் தொலைவு; திருஐயாற்றினின்றும் ஏழுகல் தொலைவு.

## 26. திருக்கண்ணங்குடி

சியாமள மேனிப் பெருமாள், அரவிந்த வல்லி லோகநாதன், லோகநாயகி.

பன்னிய பாரம் பார்மகட் கொழியப்
பாரத மாபெரும் போரில்,
மன்னர்கள் மடிய மணிநெடுந் திண்தேர்
மைத்துனர்க் குய்த்தமா மாயன்,
துன்னுமா தவியும் சுரபுனைப் பொழிலும்
சூழ்ந்தெழு செண்பக மலர்வாய்,
தென்னவென் றளிகள் முரன்றிசை பாடும்
திருக்கண்ணங் குடியுள் நின்றானே.
-பெரியதிருமொழி.

பார்-பூமி, உய்த்தல்-கொண்டுவிடுதல், மாதவி-குருக்கத்தி, முரலுதல்-ஒலித்தல்.

தமிழ்நாட்டுப் பஞ்ச கிருஷ்ண ஷேத்திரங்களுள் ஒன்று. திருமங்கையாரின் ஒரு திருமொழி பெற்றது.

திருவாரூருக்கு கிழக்கே ஏழுகல் தொலைவிலுள்ள கீழ் வேளூர் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே இரண்டுகல் தொலைவு.

## 27. திருக்கண்ணமங்கை

பக்தவத்சலன், பத்தராவிப் பெருமாள், அபிஷேகவல்லி

ஏற்றி னையிம யத்துளெம் ஈசனை
இம்மை யைமறு மைக்கு மருந்தினை
ஆற்றலை அண்டத் தப்புறத் துய்த்திடும்
ஐய னைக்கையி லாழிஒன் றேந்திய
கூற்றி னை, குரு மாமணிக்குன்றினை
நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை,
காற்றி னைப்புன லைச்சென்று நாடிக்
கண்ண மங்கையுள் கண்டுகொண்டேனே.
—பெரிய திருமொழி.

நித்திலம்-முத்து, தாயார் சந்நிதியில் தேன்கூடு பூசை பெறுகிறது.

திருமங்கையாழ்வார் 14 பாசுரங்களால் மங்களா சாசனம் செய்துள்ளார். சென்ற நூற்றாண்டில் இராமலிங்க அடிகளாரும் ஒரு திருவருட்பாவினால் போற்றியுள்ள வைணவத் திருத்தலம். இங்குள்ள இறைவன் பெரும்புறக் கடல் பெருமாள் என்று அழைக்கப்பெறுகிறார். ப்ருஹத்-பஹிஸ்ஸிந்து நாதன் வருணனுக்குப் பிரத்யட்சமானவர். பஞ்ச கிருஷ்ணஷேத்திரங்களுள் ஒன்று.

சிற்பத்திறன் மிகுந்தகோயில். இங்கு வைகுண்ட ஏகாதசி மிகவும் விஷேசம்.

திருவாரூர்-கும்பகோணம் நெடுஞ்சாலையில் திருவாரூரினின்றும் நான்கு கல் தொலைவில் இருக்கின்றது.

## 28. கவித்தலம் (கபிஸ்தலம்)

கசேந்திர வரதர், ரமாமணிவல்லி

கூற்றமும் சாரா; கொடுவினையும் சாரா; தீ
மாற்றமும் சாரா வகையறிந்தேன்-ஆற்றங்
கரைக் கிடக்கும் கண்ணன் கடல்கிடக்கும்;
மாயன்
உரைக் கிடக்கும் உள்ளத்து எனக்கு.
-இயற்பா நான்முகன் திருவந்தாதி.

(தீ மாற்றம்-தீய பழிச் சொல். சிறிய திருவடி -கபி.)

திருமழிசையாழ்வார் இவ் ஒரே வெண்பாவினால் மங்களா சாசனம் புரிந்துள்ளார்.

பாபநாசத்திலிருந்து வடக்கே இரண்டு கல் தொலைவு. பஞ்ச கிருஷ்ண சேத்திரங்களுள் ஒன்று.

(தொடர்ந்து வரும்)

## திருக்கடவூர்

# ஸ்ரீகாலசம்ஹாரமூர்த்தி

தி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்

இம்மண்ணுலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும் என்றாவது ஒருநாள் இறப்பது திண்ணம். இருப்பினும் மரண பயத்தை எண்ணி அஞ்சாதவரே பொதுவாக இல்லை எனலாம். நம் போன்றோருக்காக திருவருட் செல்வர்கள் இறைவனிடம் வேண்டும் பலவற்றுள் யமன் தங்களை அணுகும்போது தங்களைக் காக்க வேண்டும் என்பது ஒன்று. உதாரணமாக அருணகிரிப் பெருமானின் பல திருப்புகழ் பாடல்களில் இதைக் காணலாம்.

''கனைத்து எழும் பகடுஅதுபிடர்மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலிதன் உழையினா
கதித்து அடர்ந்து எறிகயிறு அடுகதைகொடு
. . . . . . பொருபோதே
. . . . . .
. . . எமபயம் அறமயில் முதுகினில்
வருவாயே''

என்பது அவரது திருவாக்குகளில் ஒன்று. அத்தகைய யம பயத்தைக் கடப்பிக்க உதவும் திருத்தலம் எனப்போற்றப்படும் பதி திருக்கடவூராகும்.

திருமயிலாடுதுறையினின்றும் தரங்கம்பாடி செல்லும் வழியில் ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் தொலைவில் இது உள்ளது. கடம் என்றால் குடம். இங்கு வைக்கப்பட்ட அமுதகுடம் அமுதலிங்கமானமையால், இது கடவூர் என்ற பெயரினைப் பெற்றது என்றும் சொல்லப்படுகிறது.

மார்க்கண்டேயனுக்காக இறைவன் காலால் காலனைச் சாய்ந்த திருத்தலம் இது. எனவே இது அட்டவீரட்டதலங்களில் ஒன்றாகத் தொழப்படுகிறது. இறைவனது பேராற்றலை உணர்த்தும் இச்செயலை திருவருட் செல்வர்கள் யாவருமே பரவியிருப்பினும் அப்பர் சுவாமிகள் தான் இதைப் பெரும் அளவில் போற்றிப் பாடியுள்ளார். (ஏறத்தாழ 134 இடங்களில் வணங்கியுள்ளார்.).

மூவரின் தேவாரப்பாடல் பெற்ற இரு அட்டவீரட்ட தலங்களில் இது ஒன்று. சிவநேயச் செல்வர்களான 63 நாயன்மார்களில் குங்குலிய கலயநாயனாரும், காரி நாயனாரும் பிறந்தபதி இது. மேலும் ''திருக்களிற்றுப் படியாரை'' அருளிய உய்ய வந்த தேவனார் தோன்றிய தலம் இது. ஏறக்குறைய 250 ஆண்டுகளுக்கு முன்பு அன்னை அபிராமி மீது அபிராமி அந்தாதி பாடிய அபிராமிபட்டர் வாழ்ந்த பதி.

''கடிகமழும் பொழில் சூழும் அந்தணகடவூர்'' என சம்பந்தப் பெருமானால் சிறப்பிக்கப்பெற்ற இந்த தலத்தில் மேற்குநோக்கி அமைந்துள்ள கோயில் 3 திருச் சுற்றுக்களைக் கொண்டது. அன்னையின் சந்நிதி வெளித்திருச் சுற்றில் தென்புற மூலையில் உள்ளது. இங்குள்ள வடிவங்களில் அட்டவசுக்களில் 6 வசுக்கள் மற்றும் சுரகணபதி ஆகியவை வேறு எந்தக் கோயிலிலும் காணப்படாத அரிய வடிவங்களாம். மகாமண்டபத்தில் காலகாலன் இறைவியுடன் செப்புவடிவில் உள்ளான். அவனுக்கு எதிரில் அவனது அருளைப்பெற்ற யமன் காணப்படுகிறான். யமவாதனையைக் கடப்பிக்கும் திருத்தலம் இது எனப்படுவதால், எல்லா சிவாலயங்களில் காணப்படும் நவகிரகங்கள் இங்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

இறைவன் காலனைக் காலால் மாளச் செய்தது அவன் காலனுக்கு மேற்பட்டவன் என்பதை உணர்த்துகின்றது. அதாவது அவன் இறுதி அற்றவன் என்பதாம். இறுதி இல்லை எனில் முதலும் இல்லை என்பது பெறப்படுகிறது. எனவே காலன் உயிரைக் கொண்டது இறைவன் மூலமும் நடுவும் ஈறும் அற்ற பரம்பொருள் என்பதைத் தத்துவ ரீதியாக உணர்த்துகிறது.

கலைச்சிறப்புமிக்க வடிவங்கள் இரண்டு இங்கு உள்ளன. அவை 1. அன்னையுடன் கூடிய காலாந்தகன். 2. அந்தகனை மாய்க்க இலிங்கத்தினின்றும் தோன்றும் இறைவன்.

சோழப் பேரரசர்கள், இரண்டாம் பாண்டியப் பேரரசைச் சார்ந்த மன்னர்கள், விசயநகரப் பேரரசன் கிருஷ்ணதேவராயர் ஆகியோரின் 38 கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன. இவற்றினின்றும் மாமன்னன் முதலாம் இராசராச சோழன், அவன் மைந்தன் முதலாம் இராசேந்திர சோழன் பெற்ற வெற்றிகள் தெரியவருகின்றன. மேலும் இறைவனேயன்றி, அவனது அடியார்களும் எவ்வாறு போற்றி வணங்கப்பட்டனர் என்பதும் தெரிகிறது.

இங்கு நடைபெறும் திருவிழாக்களில் கார்த்திகை மாதம் திங்கட்கிழமைகளில் 1008 வலம்புரி சங்குகளால் செய்யப்பெறும் அபிஷேகம் சிறப்புமிக்கது. யமவாதனையை கடப்பிக்க உதவும் திருத்தலம் இது என்பதால் 60,80வயது நிலையில் செய்யப்பெறும் ஆயுள் வேள்வியை இங்கு செய்வது சிறப்புமிக்கதாகக் கருதப்படுகிறது.

# பரந்தாமனும் பட்சிராஜனும்

## ஜயஸ்ரீ மூகாம்பிகா

பறவைகளுக்கெல்லாம் அரசனாக இந்திரனாக விளங்குபவர் கருடன். கருடாழ்வான் என்று வைணவர்களால் பெரிதும் போற்றி வணங்கப்படுபவர். பரமனிடமே மனம் ஆழ்ந்து இருப்பவரை 'ஆழ்வான்' என்று கூறுகிறோம். கருடன் ஆழ்வான் மாத்திரமல்ல. ஸ்ரீமந்நாராயணருக்கு வாகனமாகவும், கொடியாகவும் விளங்குபவர். பட்சிராஜன் வேத சொரூபம். பரந்தாமன் வேதத்தின் பொருள். பெருமானின் பூரண அவதாரங்களான ஸ்ரீராம அவதாரத்திலும் ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திலும் கருடன் உதவி செய்திருக்கிறார். ஸ்ரீராமலட்சுமணர் நாக பாசத்தால் கட்டுண்டிருந்தபோது கருடன் அங்குவந்து அதிலிருந்தும் விடுதலை செய்தார். நரகாசுர யுத்தத்தின்போது ஸ்ரீ கிருஷ்ணருக்கு வாகனமாகவிருந்து உதவி செய்தார். தாயின் துன்பத்தை நீக்கப் பிறந்த தவப்புதல்வர் இவர். கருடனுடைய தந்தை கஸ்யப மகரிஷி. தாய் வினதை. கஸ்யபருடைய முதல் பத்தினி அதிதி என்பவள் தேவேந்திரன் முதலான தேவர்களுடைய தாய். மற்றொரு மனைவியின் பெயர் கத்ரு, இவள் ஆயிரம் சர்ப்பங்களைத் தன் பிள்ளைகளாகப் பெற்றாள்.

ஒரு சமயம் வினதையும் கத்ருவும் சமுத்திரக் கரையில் உலவிக் கொண்டிருந்தனர். தூரத்தில் தேவேந்திரனுடைய குதிரை 'உச்சைஸ்வரஸ்' மேய்ந்து கொண்டிருந்தது. அது பாற்கடலில் தோன்றிய பால்வண்ணக்குதிரை. அதைப் பார்த்து மனதில் வஞ்சக எண்ணம் கொண்ட கத்ரு 'அதன் வால் கறுப்பாக உள்ளதன்றோ?'' என்று வினதையைப் பார்த்து வினவினாள்.

"இந்திரன் பரிதியைக் கண்டு ஆங்கு இந்துவின் களங்கம்போலச்
சந்தவால் கருமை உற்ற தகைமை கண்டனையென்று
முந்து கத்துரு உரைத்தாள் முருக்கிதழ் வினதை நோக்கி
எந்த நேரத்தில் கண்டாய் இல்லையே கருமை என்றாள்''.

கத்ருவிடம் ''பூரண வெண்மையாக உள்ள குதிரையைப் பார்த்து, வால்கறுப்பு என்று கூறுகிறாயே?'' என்று வினதை கூறினாள். இந்த விஷயத்தில் இருவருக்கும் விவாதம்ஏற்பட்டது.

கத்ரு, ''குதிரையின் வால் கறுப்பாக இல்லை என்றால் நான் உனக்கு அடிமையாகிறேன். கறுப்பாக இருந்தால் நீ எனக்கு அடிமையாக வேண்டும், சம்மதமா?'' என்றாள்.

வினதையும் அந்தப் பந்தயத்திற்கு உடன்பட்டாள். நாளையதினம் குதிரையை அருகில் சென்று பார்ப்போம் என்று முடிவு செய்து அவரவர் இல்லம் திரும்பினர்.

கத்ரு தன் பிள்ளைகளான சர்ப்பங்களைப் பார்த்து, ''நீங்கள் அக்குதிரையின், வாலில் கறுப்பு நிறமுள்ள ரோமங்கள் போலாகிவிடுங்கள்'' என்றாள்.

சில சர்ப்பங்கள் அதற்கு உடன்படவில்லை அவர்களைக் கத்ரு, ''ஜனமேஜயன் என்ற பாண்டவர் வம்சத்து ராஜரிஷி நடத்தும் சர்ப்ப யாகத்தில் நீங்கள் அக்னியில் வீழ்வீர்கள்!'' என்று சபித்தாள்.

உயிருக்கு பயந்து சில சர்ப்பங்கள் அவள் சொற்படியே செய்தன. மறுநாள் குதிரையின் வால் கறுநிறமாக இருப்பதைக் காட்டி வினதையைத் தனக்கு அடிமையாக்கிக் கொண்டாள் கத்ரு.

ஒரு சமயம், சிருஷ்டிகர்த்தாவாகிய கஸ்யபர் ஒரு யாகம் செய்தார். அந்த யாகத்திற்கு தேவர்கள், கந்தர்வர்கள், மகரிஷிகள் அனைவரும் திரண்டுவந்து உதவி செய்தனர். யாகாக்கினியில் இடுகின்ற 'சமித்' என்ற கட்டைகளை அனைவரும் கொணர்ந்தனர். சக்தி நிறைந்த தேவேந்திரர் மலைபோன்ற சமித்தை எடுத்து வந்து கொண்டிருந்தார். வழியில் 'வாலகில்யர்கள்' என்ற மகரிஷிகளைக் கண்டார். கட்டைவிரல் அளவே அவர்களது சரீரம், அவர்களும் யாகத்திற்கான சமித்தை, ஒற்றைப் பலாக்குழியை அநேகம் பேராகச்சேர்ந்து சுமந்துவந்து கொண்டிருந்தனர். வழியில் மாட்டுக் குளம்படியால் மண் சற்றுக் குழிந்து, அதில் நீர் தேங்கியிருந்தது. அதைத் தாண்டமுடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்த அவர்களைப் பார்த்துத் தேவேந்திரர் சிரித்து, அவமதித்து வேகமாகக் கடந்து சென்றார்.

அதனால் மிகுந்த கோபமும், வருத்தமும் கொண்டு அம்மகரிஷிகள் யாகசாலையை அடைந்தனர். ''விரும்பும் சக்தியுள்ளவனும், நினைத்தபடி எங்கும் சஞ்சாரம் செய்ய வல்லவ





னும் இந்திரனுக்குப் பயத்தைக் கொடுப்பவனுமாக மற்றோர் இந்திரன் தோன்ற வேண்டும் என்றும், வீரதீரத்தில் இந்திரனுக்கு நூறு மடங்கு அதிக சக்தி உள்ளவனாகத் தோன்றக் கூறிக் கிரியை செய்தனர். இதையறிந்த தேவேந்திரர் பயந்து தம் தந்தையான கஸ்யபரைச் சரணடைந்தார்.



கஸ்யபர் வாலகில்ய மகரிஷிகளைச் சமாதானப்படுத்தினார். ''தபோதனர்களே! தங்கள் கோபம் நியாயமானதே. ஆயினும் இந்திரன் பிரம்மதேவரது கட்டளையால் மூவுலகங்களுக்கும் அதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறான். அந்த பிரம்மதேவரது சொல் பொய்யாகக்கூடாது. நீங்கள் செய்த இந்த யாகக்கிரியையும் பொய்யாகக்கூடாது. உங்கள் இந்த யாகப் பயனால் மிகச்சிறந்தவனாகத் தோன்றப் போகிறவன், பட்சிகளுக்கு இந்திரனாக விளங்கட்டும். இப்போதுள்ள தேவேந்திரன் விஷயத்தில் நீங்கள் அனுக்ரஹம் செய்ய வேண்டும்'' என்று வேண்டினார்

வாலகில்ய மகரிஷிகள் ''சிருஷ்டிகர்த்தாவே, நாங்கள் செய்த இந்த யாகப்பலனை உமக்கே கொடுத்துவிடுகிறோம். உம்விருப்பம் போல் செய்துகொள்ளுங்கள்'' என்றனர். அதே சமயத்தில் புத்திரனுக்காக நோன்பு நோற்று பரிசுத்தத்துடன் வினதை கஸ்யபரிடம் வந்தாள். அவளுக்கு அந்த யாகப் பிரசாதத்தை வழங்கிய கஸ்யபர்,''உனக்கு மிகச்சிறந்த பட்சிராஜன் மகனாகப் பிறப்பான்'' என்றார். பின் தேவேந்திரனைப் பார்த்து, 'மகனே! பட்சிராஜன் உன் சகோதரனாவான். அவனால் உனக்குத் துன்பம் நேராது. நீயே இந்திரனாக விளங்குவாய். உன் வஜ்ராயுதத்தைவிடச் சிறந்த ஆயுதம் தபஸ்விகளின் சொல் என்னும் ஆயுதம். இனி மறந்தும் தபோதனர்களை அவமதியாதே'', என்று அறிவுரை கூறினார். இந்திரன் அச்சம் நீங்கி, சொர்க்கம் சென்றார். அவ்வாறே சிறிது காலம் கழித்து கருடன் பிறந்தார்.

கருடனுடைய ஜொலிக்கின்ற பெரு நெருப்பு ஒளியினால் அனைத்துத் திசைகளும் பிரகாசித்தன. நினைத்தபடி உருவமெடுக்கத் தக்க கருடன் மேன்மேலும் பெரிய சரீரமாக வளர்ந்தார். ஆகாயத்தில் சென்றார். இரண்டாவது காலாக்கினி போன்று வானத்தில் சென்ற அவரைக்கண்டு தேவர்கள் பயந்து விஸ்வரூபமாக வீற்றிருக்கின்ற அக்கினி பகவானைச் சென்று வணங்கினர்.

''உங்களுடைய மிகப் பெரிய உருவம் ஜொலித்துக் கொண்டு பரவியபடி இருக்கிறதே! அது எங்களைத் தகித்துவிடாமல் இருக்க வேண்டும்'' என்று வேண்டினர்.

''தேவர்களே! நீங்கள் நினைப்பது போன்று, அவ்வுருவம் என்னுடையதன்று. அவன் கருடன். எனக்கொப்பான தேஜஸ் கொண்டவன். அவன் சர்ப்பங்களை அழிக்கப் போகிறான். அசுரர்களுக்குப் பகைவன். தேவர்களாகிய உங்களுக்கு நன்மையே செய்வான். நீங்கள் பயப்படவேண்டாம்!'' என்று விளக்கினார்.

இதைக் கேட்ட தேவர்கள் மகிரிஷிகளையும் அழைத்துக்கொண்டு கருடன் இருக்கும் இடத்தை அடைந்து நெருங்க இயலாததால் தூரத்திலேயே நின்று கொண்டு ஸ்தோத்திரம் செய்தனர்.


''வினதையின் புத்திரரே! எம்மைக்காக்க வேண்டும். உன் தேஜஸால் நாங்கள் தபித்துக் கொண்டிருக்கிறோம். அதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்; பெரிய இடிமுழக்கத்திற்குச் சமானமான உன் சப்தத்தினால் நாங்கள் நடுங்குகின்றோம். நீ இந்த ரூபத்தை அடக்கிக் கொள்ள வேண்டும். கருணை செய்!'' என்று வேண்டினர்.

உடனே கருடன் தன் உருவை அடக்கிக் கொண்டார். தேஜஸையும் குறைத்துக்கொண்டார். மிக்கப் பிரதாபம் வாய்ந்த கருடன் தன் தாயுடன் வசித்து வரும்போது, கத்ரு தன் தாய்க்கு கட்டளைகளிடுவதைக் கண்டார். சர்ப்பங்களை தூரத்திலிருக்கும் தீவுகளுக்குச் சுமந்து செல்வதும், மீண்டும் சுமந்து வருவதுமான வேலைகளும் கருடனும் செய்ய வேண்டியிருந்தது. இதைப் பொறுக்கவியலாத கருடன், ''தாயே, நான் ஏன் சர்ப்பங்களுக்கு வேலை செய்ய வேண்டும்?'' என்று வினதையைக் கேட்டார்.

கருடன் பிறப்பதற்கு முன்பே தான் கத்ருவிற்கு அடிமையான விவரத்தை வினதை தெரிவித்தாள். கருடன் இதற்கான நிவாரணத்தை கத்ருவிடமே கேட்டார். தேவேந்திரனிடமுள்ள அமிர்தத்தைக் கொண்டு வந்தால், அடிமைத் தளையிலிருந்தும் விடுதலைகிடைக்கும்'' என்று அவள் கூறினாள்.



கருடன் செயற்கரிய அச்செயலைச் செய்வதாகக் கூறித் தன்தாயின் ஆசிகளைப் பெற்றுக் கொண்டு கிளம்பினார். அமிர்தம் இருக்கும் இடத்தைச் சுற்றித் தேவர்களின் பலத்த காவல் இருந்தது. அவர்களோடு யுத்தஞ்செய்து இரத்தம் பெருக்கெடுத்தோட தேவர்கள் ஓடும் படிச்செய்து உட்புகுந்தார். உள்ளே ஒரு ஆழ் கிணற்றுக்குள் அமிர்தம் இருக்கிறது. அங்கே சென்ற கருடன் அவ்விடத்தைச் சுற்றி நாற்புறமும் சுழன்று கொண்டிருக்கின்ற அக்கினி வளையத்தைக் கண்டார். சற்றுச் சிந்தித்து பெரிய உருவோடு எண்ணாயிரத்து நூறு வாய்களை எடுத்துக்கொண்டு, அவற்றால் நதிகளைக் குடித்து மீண்டும் வேகமாக அங்கு வந்து அந்நதிகளைப் பொழிந்தார். ஜொலிக்கின்ற அக்கினி அவிந்தது. உள்ளே பிரவேசித்தார். அடுத்தபடி மிகக் கொடிய, சுற்றிலும் கத்தி முனைகளுள்ள பயங்கரமான ஒரு இயந்திரச் சக்கரம் தேவர்களால் நிர்மாணம் செய்யப்பட்டு அமிர்தத்தை



எடுக்கவருபவர்களைச் சேதிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. கருடன் அதனுள் நுழைய வழியிருக்கிறதா என்று அதன்மேலேயே வட்டமிட்டுப் பார்த்தார். சக்கரத்தில் ஆரக்கால்களுக்கிடையே உள்ள இடைவெளியைக் கண்டார். மிகச் சிறிய உருவாகி அதன் வழியே உட்புகுந்தார். அதற்குக் கீழே அமிர்தக்குடம் இருந்தது. ஆனால் மிகக் கொடிய மின்னலைப் போன்ற இரண்டு சர்ப்பங்கள், கண்களிலேயே விஷத்தைக் கொண்டவை இமை கொட்டாமல் அதற்குக் காவலிருந்தன. இவற்றில் ஒன்று எதிரிலே இருப்பவரைப் பார்த்தாலும் அவர் பஸ்மாகிவிடுவார். கருடன் அவை அறியாதவாறு மணலை அவற்றின் கண்களில் தூவி தன்னை அவை பார்க்க முடியாதவாறு செய்து அவற்றின் உடல்களைத் துண்டாக்கினார். பின் அமிர்தக் குடத்தை எடுத்துக் கொண்டு, இயந்திரத்தை முறித்துவிட்டு மேலே கிளம்பினார்.

கருடன் அமிர்தம் எடுத்துப் போவதைக் கண்டு தேவேந்திரன் வழிமறித்தார். தன் வஜ்ராயுதத்தால் அடித்தார். கருடன் சிரித்தபடியே தன் ஒரு இறகை உதிர்த்தார். 'தேவேந்திரரே! உம் வஜ்ராயுதத்திற்கு மதிப்புக் கொடுப்பதற்காக இந்த இறகை உதிர்த்தேன்'', என்றுகூறி மீண்டும் வேகமாகப் பறந்தார்.

தோற்ற தேவேந்திரன் திருமாலைச் சரணடைந்தார். திருமால் கருடன் செல்லும் வழியைத் தடுத்து நின்றார். இருவரும் யுத்தம் செய்தனர். கருடன் பராக்ரமத்தை அனைவரும் காணப்புலப்படுத்திய திருமால், தாம் தோற்றவர் போல் நின்றார். கருடனுக்கு வரம் கொடுப்பதாகக் கூறினார். உங்களுக்கும் மேலே நான் இருக்க வேண்டும் என்று வரம் கேட்டார் கருடன். அப்படியே ஆகட்டும் என்றார் பெருமான்.

பின் கருடன், தங்களுக்கு எதுவேண்டுமோ அதைக் கேளுங்கள்! என்று பெருமானை வேண்டினார்.

'' எனக்குக் கீழே நீ இருக்க வேண்டும். இதுவே என் விருப்பம்!'' என்றார் பெருமான்.


கருடர், ''நேர்எதிரான இரண்டு வரங்களும் எப்படி நிறைவேறும்? என்று கேட்க, பகவான் கருடனுக்கு ஞானத்தைக் கொடுத்தார். கருடன் வேத சொரூபம் என்பதைப் புலப்படுத்தினார். கருடன் கேட்ட வரத்தின் படி, தன் மேலே கொடியாகக் கருடன் விளங்குவார் என்றும், தான் கேட்டபடி தனக்குக்கீழ் வாகனமாக விளங்குவார் என்றும் அருளினார்.

தேவேந்திரர் வைனதேயருடைய பிரபாவத்தையறிந்து, 'மகாத்மாவே, நீ என்னுடன் நட்பு கொள்ள வேண்டும். அமிர்தத்தை தீயவர்களுக்கு அளிக்காமல் தன்னிடமே திருப்பி அளிக்கவேண்டும்!'' என்று வேண்டினார்.

''தேவேந்திரரே, முக்கியகாரணத்திற்காக இதை எடுத்துப் போகிறேன். இதை எவருக்கும் கொடுக்கமாட்டேன். நான் இதை எங்கே வைக்கிறேனோ, அப்போது நீர் அதை எடுத்துக் கொள்ளலாம்'' என்றார்.

தேவேந்திரர் சந்தோஷமடைந்தார். கருடனுக்கு வரமளிப்பதாகக் கூறினார்.

''மிக்க வலிமையுள்ள சர்ப்பங்கள் எனக்கு ஆகாரமாக வேண்டும்'', என்று வரம் பெற்றுக் கொண்டார் கருடன்.



பெருமானிடமும் விடைபெற்றுக் கொண்டுத் தன் இருப்பிடத்தை அடைந்தார். அமுதக் குடத்தைத் தர்ப்பைப் பரப்பின்மீது வைத்தார். கத்ருவும் சர்ப்பங்களும் மிக மகிழ்ந்தனர் ''நீயும் உன் தாயும் அடிமைகளல்ல'', என்ற

வாக்குமூலத்தை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார் கருடன். உடனே தேவேந்திரர் அமிர்தக் குடத்தை எடுத்துக் கொண்டு மறைந் தார்.

அமிர்தத்தைச் சாப்பிட்டு மரணமின்றி இருக்கலாம் என்று மகிழ்ந்திருந்த சர்ப்பங்கள் ஏமாற்றமடைந்தன. ஒருவேளை அமிர்தம் சிந்தியிருக்குமோ என்று எண்ணி அமிர்தம் வைக்கப்பட்டிருந்த தர்ப்பைகளை நாடிச் சென்று நாவினால் நக்கின. தர்ப்பைகளின் கூர் மையினால் சர்ப்பங்களின் நாக்குகள் இரண் டாக பிளவுபட்டன.

தனயன் என்ற நிலையில் தாய்க்குத் தன் கடமையைச் செய்த கருடன், தான் தோன்றிய பயனை எய்திய நிலையில் பெருமானுக்கே பணிபூண்டு வாகனமாக, கொடியாக விளங்கு கிறார்.

இவரைப்பற்றி திருமழிசையாழ்வார்

''புட்கொடி பிடித்த பின்னரும்
புள்ளையூர்தியாதலால்'' -என்றும்

''அஞ்சிறைப் புள்ளூர்தியால்'' —என்றும் பாடி யுள்ளார். புள்-பறவை (கருடன்)

பெரியாழ்வார் பெருமானுக்குப் பல்லாண்டு பாடும்போது ''பையுடை நாகப்பகைக் கொடி யானுக்குப் பல்லாண்டு'' என்றும்.

''பதக முதலை வாய்ப்பட்ட களிறு
கதறிக் கைகூப்பி என் கண்ணா! கண்ணா! என்ன
உதவப்புள்ளூர்ந்து அங்கு உறுதுயர் தீர்த்த''

என்றும் பன்னிரண்டு பாசுரங்களில் கருடனைப் பற்றி பாடியுள்ளார்.

பெரியாழ்வார் குலக்கொடி ஆண்டாளோ 5 பாடல்களில் கருடனைப்பாடுகிறார் ''கருடக் கொடியுடைப் புண்ணியனை வரக்கூவாய்''- என்றும்

''கருடக் கொடியுடையார் வந்தருள் செய்து'' என்றும் இன்னும் பலவாறும் பாடு கிறார்.

குலசேகரர் 'அடலரவப் பகையேறி'' என் றும் தொண்டரடிப் பொடியாழ்வார் 'கருட வாகனன்'' 'புட்கொடியுடைய கோமான்' என்றும் தத்தம் பாடல்களில் குறிப்பிட் டுள்ளனர்.

திருமங்கையாழ்வார் இருபத்தியோரு பாடல்களிலும், நம்மாழ்வார் நாற்பத்தெட்டு பாசுரங்களிலும், பொய்கையார் ஆறு பாசுரங் களிலும், கருடனைப் பாடிப் பரவியுள்ளனர். பூதத்தாழ்வார் ''கொடிமேல் புள் கொண் டான்'' என்றும், 'அத்தியூரான் புள்ளை யூர் வான்'' என்றும் பேயாழ்வார் ''புள்ளூர்திச் செல்வன்' என்றும், ''கருடன் மேல் கொண்ட கரியான் கழலே' என்றும் பாடியுள்ளார்.

கருடனே பெரிய திருவடி என்று திரு நாமம் பெற்று, பெருமான் சந்நிதிகொண்டுள்ள இடத்திலெல்லாம் அவர் முன்னிலையில் கூப் பிய கரத்துடன் விளங்குகிறார். இவரை வணங்கி இறைவனை வணங்குதல் இகபர வாழ்விற்கு வழியாகும்.

— — — — — —

## நூல் மதிப்புரை

நூலாசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

விலை : ரூ. 15.00

பக்கம் : 120.

வெளியீடு : கலைவாணி புத்தகாலயம்,
158, உஸ்மான் ரோடு,
தியாகராயநகர்,
சென்னை- 600017.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் முப்பெ ரும் தலைப்புகளில் ஆற்றிய முத்தமிழ் சொற் பொழிவுகளின் தொகுப்பு இந்நூல். 1. சைவ சித்தாந்த வரலாறு, 2. சைவ சித்தாந்தத் தத்துவம், 3. சைவ சித்தாந்தமும் சமுதாய மேம்பாடும் என்ற முப்பெரும் தலைப்புகளில்.

''சைவத்தின் மேல் சமயம் வேறிலை
அதில்சார் சிவமாம்
தெய்வத்தின்மேல் தெய்வம் இல்''.

என்ற பேருண்மையை நிலைநாட்டியுள்ளார். நம் போற்றுதலுக்குரிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்.

''சைவ சித்தாந்தத்தில் சாதிகள் இல்லை. சிறந்த மனையறம் போற்றப் பெறுகிறது.... சைவசித்தாந்தத்தின் தத்துவம் செயலுருக் கொள்ளுமானால் வையம் இன்புறும். இன்பமே சூழ்க. எல்லோரும் வாழ்க''. அனைவரும் கற்க வேண்டிய அருமையான நூல் இது.

—நிறைமதி.



# கம்பரின் இராமாவதாரம்

டாக்டர் த. அமிர்தலிங்கம் **[27]**

மயக்கம் நீங்குவதும் சக்கரவர்த்தி தசரதர் மறைவினைக் குறித்துப் பலவும் கூறி இராமர் புலம்புகிறார். '' நந்தா விளக்கனைய நாயகரே! ஞால மக்களுக்குத் தந்தையாய்த் திகழ்ந்தவரே! ஒப்பில்லாத் தருமத்தாய் போன்றவரே! அருளுருவானவரே! பகை நடுங்கவைத்த சிங்கமே! பண்பில் தங்கமே! எம் தந்தையே! நீர் மறைந்தா போய்விட்டீர்! சத்தியத்திற்கு மெய்யான உறவென்று உலகில் இனி யார் இருக்கிறார்கள்? அறுபதினாயிரம் ஆண்டுகள் சிறப்புற வாழ்ந்திருந்தீர்! உம் உயிர் பறிக்கும் எமனாக அல்லவா வந்து நான் பிறந்துவிட்டேன்! அரிய புத்திர காமேட்டி யாகம் புரிந்து நீர் அருந்தவ புதல்வனாக என்னைப் பெற்றது, உம்முயிர்க்கு யான் எமனாகும் பொருட்டுதானா? சம்பராசுரனைக்கொன்று, தேவேந்திரன் ஆள அரசு கொடுத்த மாட்சிமைமிக்க எம் தந்தையே! இம்மண்ணுலக அரசாட்சியை எனக்குக் கொடுத்துப் புலன்கள் அடக்கித் தவம் செய்யப் போகிறேன் என்றீரே! நீர் தவம் செய்யும் அழகு இதுதானா! நான் இவ்வுலகில் உள்ள ஓரிடம் விட்டு மற்றுமோர் இடம் வந்தேன். இப்பிரிவை ஆற்றாமலே ஆருயிர் நீர் துறந்து விட்டீர்! ஆனால் வேற்றுலகம் - வானுலகம் சேர்ந்தீர் நீர் எனக்கேட்டும் நானோ இன்னும் உயிர் தாங்கிப் பிழைத்திருக்கிறேன்! இது என்ன கொடுமை தந்தையே! இது என்ன கொடுமை!'' என்று தந்தையின் பிரிவாற்றாது கண்ணீர் விட்டுக் கதறுகிறார் இராமபிரான்.

'நந்தா விளக்கனைய நாயகனே! நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் தாயே! தயாநிலையே!
எந்தாய் இகல்வேந்தர் ஏறே! இறந்தனையோ
அந்தோ இனி வாய்மைக்கு யாருளரே மெய்
யுற்றார்?''

'தேனடைந்த சோலை திருநாடு கைவிட்டுக்
கானடைந்தேன் என்னத் தரியாது காவலநீ
வானடைந்தாய் இன்னம் இருந்தேன்நான்
உகந்தே
ஊனடைந்த தெவ்வர் உயிரடைந்து ஒள்வே
லாய்''

இவ்வாறு இராமர் புலம்பும்போது பரத்வாசர் முதலான முனிபுங்கவர்களும், வசிட்டரும் அங்குவந்து சேருகிறார்கள். தந்தையிறந்த சோகம் தாளாமல் துடிக்கும் இராமரைத் தம்பியர் மூவரும் தாங்கிக் கொள்ள பிரம்மபுத்திரரான வசிட்டர் இராமபிரானின் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூறுகிறார். ''இராகவா! மறைகளின் எல்லையை அளவிட்டு அறிந்த நீயா, சனனமும், மரணமும் இயல்பே என்பதை மறந்து வருந்துவது? நிலையில்லா தனவாகிய உயிர்களின் பிறப்புகளும், இறப்புகளும் அளவிலாதகோடி என்பதை நீ அறியமாட்டாயா? எண்ணற்ற உயிர்கள், தம் தாயின் கருவிலே கூட மாண்டுபடுவதை நாம் காண்கிறோம். உன் தந்தை அறுபதினாயிரம் ஆண்டுகள் சக்கரவர்த்தியாய்ச் சிறப்புற வாழ்ந்து இயற்கை எய்தி இருப்பதால் அவருடைய மறைவு எண்ணி நீ கலங்கிடலாகாது. மும்மூர்த்திகளுக்கும் ஒரு நாள் முடிவு உண்டு. எல்லையில்லாத பிரபஞ்சத்தில் அனைத்துயிர்களும் தோன்றுவதற்கு உற்பத்தி இடமாக விளங்கும் மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆன ஐம்பெரும் பூதங்களும் கூட ஒருநாள் அழிந்துபட்டுவிடும். நல்வினை என்னும் நறுநெய் உள்ளவரையும், அவரவர்க்கு நிர்ணயிக்கப்பட்ட கால அளவெனும் திரி உள்ளவரையும் உயிர்வாழ்க்கை எனும் தீபமும் எரிகிறது. அவை பூர்த்தியாகிவிடும் போது உயிர்த்தீபமும் அணைந்து போகிறது. இராகவா! உன் தந்தை என்ற நல்வினை காரணமாகவே பிரம்மாவிற்கும் எளிதில் கிட்ட முடியாத பரமபதம் தசரதருக்குக் கிடைத்துள்ளது. ஆகவே அவருடைய மரணம் எண்ணி நீ மனம் கலக்கம் கொள்ளாதே! நீர்க்குமிழி போல நிலையின்றி மறைகிற தேகமறைவு குறித்து நீ வருந்திடாமல் சிவந்தஉன் தாமரைக்கைகளால் தந்தைக்கு ஆற்றிடவேண்டிய நீர்க் கடன்களை வந்து நிறைவேற்று'' என்று ஆறுதல் கூறுகிறார் வசிட்டர்.

எல்லா உயிர்களிடமும் அந்தராத்மாவாய் நின்று அவ்வுயிர்களுக்கெல்லாம் அறிவினை நல்



கும்படியான பரம்பொருளான இராமபிரான் வசிட்டர் கூறிய அறிவுரையால் தேறிக் கங்கையில் மூழ்கி எழுந்து மும்முறை தம் தாமரைக் கைகளால் நீர்ப்பெய்து தந்தைக்குத் தர்ப்பணம் செய்கிறார். பிறகு பிண்டமும் அவருக்குக் கொடுத்து சீதையிருக்கும் பர்ணசாலைக்கு வர, பரதன் அப்பர்ணசாலையைக் கண்டு மனம் பொருமுகிறான். பாங்கியர் இடைவிடாது சூழ்ந்துபணிவிடை புரிய, அரண்மனையின் அந்தப்புரத்தில் இராணியாக வீற்றிருக்க வேண்டிய சீதாதேவி, கானகத்தில் எளிய ஒரு பர்ணசாலையில் தனியே இருக்கும்படி நேர்ந்ததே! இதற்கும் யான் அல்லவா காரணம் என்பதாகப் பெரும் வேதனையடைகிற பரதன், சீதையைத் தவக்கோலத்தில் கண்டதும் தாங்கமுடியாத துயரத்தில் தன் முகத்தில் தானே அறைந்து கொண்டு கதறுகிறான்.

''எய்திய வேலையிற் தமியன் எய்திய
தையலை நோக்கினன் சாலை நோக்கினான்
கைகளில் கண்மலர் புடைத்துக் கான்மிசை
'ஐயன்அப் பரதன் வீழ்ந் தரற்றி னான்அரோ'

பரதனைத் தழுவி சமாதானப்படுத்துகிறார் இராமர். ''நாயகன் என் நெடும் பிரிவினால் துஞ்சினான்'' என்று தந்தையின் மறைவை இராமர் சீதைக்குத் தெரிவிக்க அதைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திகைத்துப் போகிறாள் சீதை. இராமரைத் தொடர்ந்து கானகம் வந்த சீதை எப்போதும் இராமரைப் பிரியாமலே இருப்பதால் கொடியகாடும் அவளுக்கு அயோத்தியைப் போலவே சுகத்தை நல்கியிருந்தது. ஆனால் இப்போது தசரதர் மறைந்தார் என்ற சேதியைக் கேட்டதும்தான் முதன்முதலாக சீதை துயரம் எத்தகையது என்பதையே உணர்கிறாள்.

துன்பக் கடலில் சீதை காலடி வைக்கும் முதல் கட்டம் இதுதான். இனி அவள் துயரில் எத்தனை எத்தனை கட்டங்களோ? என்பது தோன்ற ''அன்னமுந் துயர்க்கடல் அடிவைத்தாள்'' என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாடியிருக்கும் நயம் இங்கு உணர்ந்து மகிழத்தக்கது.

பூமிதேவியின் புதல்வியாகத் தோன்றிய சீதை சக்கரவர்த்தி மறைவு கேட்டு பூமியின் மேலே விழுந்து புரண்டு அழுகிறாள். முனிபத்தினியர்கள் அவளை வாரியெடுத்து ஆறுதல்கூறி, அழைத்துக் கொண்டுபோய்க் கங்கையில் நீராடச் செய்து பர்ணசாலைக்கு அழைத்துவருகிறார்கள். இதேநேரம் சுமந்திரர் இராமரின் தாயரை அழைத்துக்கொண்டு பர்ணசாலைக்கு வர அவர்களை அமங்கலக் கோலத்தில் காண்பதும் இராமருக்குத் துக்கம் பீறிடுகிறது. ''என் தந்தை எங்கே அம்மா?, என் தந்தை எங்கே அம்மா?'' என்று தாய்மார்களின் திருவடிகளைப்

பற்றிக் கொண்டு இராமர் கதற, இராமரைக் கட்டிக் கொண்டு தாயரும் கதறுகிறார்கள். இவ்வலக் காட்சியைக் கண்ணுற்ற யாவரும் அனலில் மெழுகு விழுந்து உருகுவதைப் போல் உள்ளம் உருகுகிறார்கள். சீதையையும் கட்டிக் கொண்டு தசரதரின் தேவியர் அழ, யாவரும் துயர்க்கடல் மூழ்குகின்றனர். சூரிய குலத் தோன்றல் தசரதரின் பிரிவாற்றாமல் கதிரவன் தானும் மேற்குக் கடலில் மூழ்குகிறான் என்று கவிச்சக்கரவர்த்தி பாடும் பாடல் நயம் இங்கு சுட்டுதற்குரிய ஒன்றாகும்.

மறுநாள் பரதனிடம் அவன் தவக்கோலத்திற்கான காரணத்தை வினவுகிறார் இராமபிரான். ''தந்தையார் மறைந்துவிட்டார். அவரது ஆணையின் படி வையம் உன்னுடையது. மகுடம் சூடி நாடாளாமல் மரவுரி பூண்டது ஏன்?'' என்று இராமர் வினவ அவர் வினாவைக் கேட்டு ''ஐயனே நீயுமா அறநெறிக்கு மாறுபட்டுப் பேசுவது?'' என்று பதறுகிறான் பரதன். ''நான் நாடாளக் கொடியவரம் கேட்டுத்தான் தாய் கைகேயி தந்தையைக் கொன்ற கொலை காரியானாள். இப்பூவுலகையே துயரால்நொந்து போகச் செய்துவிட்ட அப்பாவியின் மகனாகப் பிறந்த பாவி நானும் எப்படி இந்தப் பாவத்திலிருந்து நீங்குவது என்று தெரியாமல் துடித்துக் கொண்டு இருக்கிறேன். சக்கரவர்த்திக்குத் திருமகனாய் முதல் பிறந்த உனக்கே உரிமையானது அரசு. உனக்கு உரிமையான அரசை நான் ஆள முற்படுவது தருமத்தைக் கொன்று வாளினால் அதன் உடல் அறுத்து வயிற்றில் திணித்துக் கொள்ளவும் முற்படுவது போன்ற கொடுஞ் செயல் ஆகும். வஞ்சனையுள்ளத்தோடு சமயம் பார்த்து உம் அரசைக்கவர்ந்து கொள்ள நான் என்ன உன் பகைவனா? ஐயனே! உன் பிரிய சோதரனைச். சோதித்தது போதும் போதும். தந்தை செய்த தீமை, என் கொடிய தாய் செய்த தீமை இவ்விரண்டும் தீர நீயே அயோத்திக்குத் திரும்பவும் வந்து, உனக்குரிய அரசை ஏற்று ஆள்வாயாக'' என்று யாவர் முன்னிலையிலும் இராமரை மன்றாடி வேண்டுகிறான் பரதன்.

அரசைத் திரும்ப அளிப்பதற்காகவே பரதன் சித்திரகூடம் வந்துள்ளான் என்பதை இராமர் இலக்குவனுக்கு முன்பே உணர்த்தினார் என்பதைப் பார்த்தோம். பரதனின் உள்ளம் எவ்வளவு உயர்ந்த உள்ளம் என்பதையும் உலகோர் அறிய இப்பொழுது தெளிவுபடுத்தி விடுகிறார் இராமபிரான். பரதனின் உள்ளம் பதவிகளை நேசிக்காத பண்புள்ளமே. ஆயினும் தசரதரின் ஆணைப்படி அயோத்தியை ஆளும் கடமை இப்பொழுது பரதனுக்கே இருப்பதை அவனுக்குத் தெளிவுபடுத்திக் கூறுகிறார் இராமர். ''ஐய! வேத சாஸ்திர நெறிகளின்படி வையம் ஆளக்கூடிய மன்னர்களின் கட்டளையை நாம் தலைமேற் கொண்டு போற்றிடல் வேண்டும். அப்போதுதான் சத்தியமும், தருமமும், நியாயமும், நல்லொழுக்கங்களும் உலகில் நிலைபெறும். தசரதர் நமக்குச் சக்கரவர்த்தி மட்டுமல்ல, தந்தையும் கூட, நாம் மதித்துப் போற்றவேண்டியமுதல்தெய்வமானபெற்றோர் எனக்கு இட்ட ஆணை தவ வாழ்க்கை, அவர்கள் உனக்களித்த வரம் அரசவாழ்க்கை. தந்தையின் ஆணை காரணமாகவே நான் வனவாச தருமத்தை ஏற்றுக் கொண்டிருக்கும்போது அரச தருமத்தை நீ என்னிடம் வற்புறுத்தலாமா? பெற்றோர்க்கு மக்கள் ஆற்ற வேண்டிய பேருதவி அவர்களைப் புகழ்மிக வாழ்விப்பதுதான். நான் தந்தையின் வரத்தை நிறைவேற்றாமல் அவரைத் தாழ்வு செய்வேனேயானால் அதனால் அவருக்குப் பழியுண்டாவதோடு சொர்க்கத்தில் உள்ள அவர் நரகிலும் உழல நேரிடும். தந்தைக்கு நரகளிக்கவோ நான் மகனாகப் பிறந்தது? அவருடைய புகழைக் காக்க காடாள வேண்டியது எப்படி என் கடமையோ, அதே போல் நாடாள்வதும் உன் கடமையே. தந்தையளித்த அரசு உன்னுடையதே, அதை ஆள அயோத்திக்கு உடன் புறப்படு'' என்று பரதனுக்குத் தரும நியாயத்தைப் பக்குவமாகப் போதிக்கிறார் இராமபிரான்.


''அரசு நின்னதே போய் ஆள்க'' என்று இராமர் பரதனை வற்புறுத்த, பரதன் அதை உடன்படாமல் இராமரை மறுத்து வாதிடுகிறான், ''அரசு என்னதாகில் நான் அதை உமக்கு அளிக்கிறேன். நீர் ஏற்று ஆள்க'' என்று இராமரை மிக வற்புறுத்துகிறான் பரதன்.

''முன்னை வந்துதித் துலக மூன்றிலும்
நின்னை ஒப்பிலா நீபிறந்தபார்
என்னதாகில் யான்இன்று தந்தனன்
மன்ன போந்துநீ மகுடம் சூடெனா''.

''அண்ணலே! நீர்வனம் வந்துற்றதால் உலகமே வாடி வதங்கும் கொடுமையைப் பாரும். இங்கு திரண்டு வந்துள்ள மக்கள் துயரம் தீர்த்திடவேணும் அயோத்தி திரும்பவந்து, அரசினை ஏற்றுக் கொள்க'' என்று இராமரின் கருத்தை உடன்படாமல் மறுத்து வாதிடுகிறான் பரதன்.

அதிகாரமிகு அரச வாழ்வு அற்ப வாழ்வு, அது நிலையற்றது. அன்பும் பண்புமிகு தர்மவாழ்வு சொர்க்க வாழ்வு. அது சுகமானது, இந்நீதியை உலகிற்கு உணர்த்தும் வண்ணமே இவ்வாறு மாறி மாறி இராமரும் பரதனும் யாவரும் வியக்க, மதிக்க கருத்துப்போர் புரிகிறார்கள் அக்கானகத்திலே.

''ஐய! பரத! ஏழிரண்டாண்டுகள் நான் வனமாள வேண்டும் என்பது என் அன்னை வேண்டிய வரம். தந்தையும் அவ்வரத்தினை இசைந்து அருள்புரிந்தார். பெற்றவர் ஆணையை இசைந்து நான் வனமாள வந்துள்ளேன். இப்போது உனக்குரிய அரசை எனக்குத் தர இசைந்து நீ என்னை அரசாள வேண்டுகிறாய். முன் இசைந்த பணியை முடித்திருந்தால் அல்லவா, உன் வேண்டுகோளுக்கும் நான் என் இசைவைத் தெரிவிக்க இயலும்! பதினான்கு ஆண்டுக் கால வனவாசம் இன்றோடு முடிந்து விட்டதா என்ன? என் வனவாசம் முடியும்வரை நீயும் என் வேண்டுகோளுக்கு இசைந்து, அயோத்திக்குப் போய் நாட்டினை ஆள். இது என் ஆணை'' என்று பரதனுக்கு ஆணை பிறப்பிக்கிறார் இராமபிரான்.



# ஆலயத் தூய்மைப் பராமரிப்பு உழவாரப்பணி

ஆலயத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவில்லை என்றால் அது நாம் ஆண்டவனையே அவமதிப்பது போலாகும். ஆகையால்தான் ஒரு காலத்திலே அப்பரும், மாணிக்கவாசகரும் ஆலயத் தூய்மைப் பராமரிப்புப் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு அனைவரையும் ஈடுபட வற்புறுத்தியிருக்கிறார்கள்.

—தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமிகு டி. வி. அந்தோணி ஐ.ஏ.எஸ்., அவர்கள் மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயத்தில் 1985 இல் ஆற்றிய உரையிலிருந்து.

---

''எந்தை ஏவ ஆண்டு ஏழினொடு ஏழெனா
வந்த கால நான் வனத்துள் வைகநீ
தந்த பாரகந் தன்னை மெய்ம்மையால்
அந்த நாளெலாம் ஆள் என் ஆணையால்''

''என் ஆணை இது'' என்று கூறிப் பரதனை மேலும் வாதிடாமல் இராமர் தடுக்க முயல, வசிட்டர் இவ்விருவர் வாதத்தை இடைமறித்துத் தம்மேல் ஆணையிட்டு ஒன்று இராமரிடம் கூறுகிறார். ''இராகவா! அரிய கலைகளைக் கற்பித்த உன் குருவான என் ஆணை இது. உடன் நீ அயோத்தி திரும்பவேண்டும். அரசினை ஆள வேண்டும். குருவாணை இதை நீ மறுக்காதே''என்றுகுருநாதரும்ஆணையிட்டுவற்புறுத்த இராமபிரான் தம் தாமரைக்கைகளைக் குவித்து குருநாதரை வணங்கிப் பின்வருமாறு கூறுகிறார். ''யாவையும் அறிந்த குருநாதரே! பெற்றோர் சொல் கேளாதவர் நாயினும் கீழானவர் என்பது, தாங்கள் அறிவித்த நீதிதானே! அந்நீதியை நானே மீறி நடந்து கொள்ளலாமா? மேலும் என் பெற்றோர், முன் பிறப்பித்த ஆணைக்கு நேர்மாறான ஒன்றைத் தாங்கள் இப்போது எனக்கு ஆணையிட்டு உரைப்பீர்கள் ஆனால், நான் யார் ஆணைப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் தாங்கள்தான் தெளிவுபடுத்த வேண்டும்.

''முன்னுறப் பணித்தவர் மொழியை யான்என்
சென்னியிற் கொண்டது செய்வேன் என்றதன்
பின்னுறப் பணித்தனை பெருமையோ எனக்கு
என்னினிச் செய்வதை உரைசெய் ஈங்கென்
றான்''


வசிட்டரும் இராமபிரானின் நியாயமான வினாவிற்கு விடையளிக்க இயலாமல் மௌனமாகிவிடுகிறார். ஆனால் பரதனோ தன் பிடிவாதம் விடாமல் ''இராமர் திரும்பாவிடில் நானும் அயோத்தி வரமாட்டேன். அரசை யார் வேண்டுமானாலும் ஆண்டு கொள்ளட்டும். நானும் இராமருடனே இருந்து வனவாசம் புரிவேன்'' என்று தன் முடிவே முடிவானது என்று உறுதிபடக் கூற இராமரும் பரதனைச் சமாதானப்படுத்தும் வழி அறியாமல் விழிக்கிறார். இராமரின் வனவாசம் தொடர்ந்தால் அன்றி இராவணவதம் எனும் லட்சியம் நிறைவேறாமல் போய்விடும் என்று அச்சம் கொள்ளும் தேவர்கள் இப்பொழுது அசரீரியாய் வானில் இருந்து முழங்குகிறார்கள். ''தந்தையின் சத்தியம் காக்க இராமர் வனமாளட்டும்; பரதன் பதினான்கு ஆண்டு காலம் நாடாளட்டும். இதுவே இவ்விருவர்தம் கடமை''.

''ஏத்தரும் பெருங்குணத்து இராமன் இவ்வழி
போத்தரும் தாதைசொற் புரக்கும் பூட்சியான்
ஆத்தஆண்டு ஏழினோடு ஏழும் அந்நிலம்
காத்தலுன் கடன் இவை கடமை என்றனர்''

வானில் ஒலிக்கும் தேவ வாக்கினைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டுவிடுகிறார் இராமபிரான். ''தேவ ஆணையை மறுத்தல் கூடாது. நானும் உனக்கு ஆணையிடுகிறேன். நான் வனவாசம் வாழும் பதினான்கு ஆண்டுக்காலம் நீ அரசாளவேண்டும்'' என்று பரதனின் கைகளைப் பற்றிக்கொண்டு இராமர் மீளவும் மன்றாட, பரதனும் வேறுவழி இன்றி, இராமருடைய வேண்டுகோளுக்கு உடன்படுகிறான். ''இராமர் மேல் ஆணை!'' பதினான்கு ஆண்டுகள் கழியும் முன் இராமர் அயோத்திக்கு திரும்ப வந்து அரசேற்க வேண்டும். இல்லாவிட்டால் அக்கினியில் பாய்ந்து நான் உயிர்விடுவேன். இது உறுதி''. என்று பரதன் கூற, இராமபிரானும் அதற்கு இசைகிறார்.

(தொடரும்)


வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு-இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் ஆலயத் திருக்குட நீராட்டுவிழா 28.1.91 அன்று வெகுசிறப்பாக நடைபெற்றது. திருப்பணிக்குழுத் தலைவர் திரு ஏ.என். சீனிவாசராவ், பி.இ., துணை ஆணையாளர் திரு தி. ஜெயராமன், பி.ஏ.பி.எல்., உதவி ஆணையாளர் திரு ப. ராஜா, பி.எஸ்சி.,பி.எல்., நிர்வாக அதிகாரி திரு எஸ்.ஜோதி ஆகியோர் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தனர்.



பதிவு எண். எம் 7039



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் அண்மையில் ஆலயத் தூய்மைப்
பராமரிப்பு உழவாரப் பணிவிழா துவக்கப்பெற்றது. அறநிலையத்துறை
ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் துவக்கி
வைத்த இச்சீர்மிகு உழவாரப்பணி விழாவில் கல்லூரிக் கல்வித்
துறை இணைஇயக்குநர் டாக்டர் சிவ.பார்வதி அவர்களும்,
ஆலயத் துணை ஆணையாளர் கு. சிதம்பரம், பி.ஏ.,
அவர்களும், நகரின் பல்வேறு கல்லூரிகளில்
பயிலும் மாணவ மாணவியர்களும்
பங்கேற்றுக் கொண்டனர்.